MODERN WEAR

பெண்கள், சிறுமிகளுக்கான நவீன ரெடிமேட் ஆடைகள் விற்பனை நிலையம்

இல. 334, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 வைகாசி: 15 துல் ஹஜ்தா: பிறை: 3 இதழ்: 106

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 29-05-1990

### பாடசாலைகளுக்கு நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் லண்டன் றன்பேர்வி நூல் நிலையத்தினரிடமிருந்து பெற்ற நூல்களை வடக்கு கிழக்கிலுள்ள பாடசாலை நூல் நிலையங்களுக்கு வழங்கியுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

### மீண்டும் சட்டமன்ற மேல் அவை

(சென்னை)

தமிழ் நாட்டில் மீண்டும் சட்ட மன்ற மேல் அவையை அமைக்கும் மசோதா மாநிலங்கள் அவையில் நேற்று நிறைவேற்றப் பட்டது.

(8ம் பக்கம் பார்க்க)

★ வடக்கு - கிழக்கு

# மாகாண சபை கலைக்கப்பட்டு புதிய தேர்தல் அறிவிக்கப்படும்!

## 6-வது ஷரத்தை நீக்க பாராளுமன்றில் மசோதா ஹமீத் விடுதலைப் புலிகளுக்கு உறுதிமொழி

(நமது அலுவலக நிருபர் மணிசேகரன்)

★ வடக்கு - கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு விரைவில் புதிய தேர்தல் அறிவிக்கப்படும்.

★ அரசியலமைப்பின் 6வது திருத்த சட்டத்தை நீக்க அரசாங்கத்தால் விரைவில் பாராளுமன்றத்தில் மசோதா கொண்டுவரப்படும்.

மேற்படி உறுதிமொழிகளை, நீதி அமைச்சரும், வடக்கு-கிழக்கு சமாதானக் குழுவின் தலைவருமான ஜனப் ஏ. சி. எஸ். ஹமீத் விடுதலைப் புலிகளுக்கு வழங்கினர். நல்லூரில் விடுதலைப் புலிகளுக்கும், ஜனப் ஹமீத்துக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது இந்த உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

பேச்சு வார்த்தையில் விடுதலைப் புலிகளின் சார்பில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தலைவர் திரு கோ. மகேந்திரராசா (மாத்தயா), செயலாளர் யோகரட்ணம் யோகி, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட உபதளபதி திரு. ஜெயா ஆகியோரும் பங்குபற்றினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

### அடுத்த பேச்சுவார்த்தையை கொழும்பில் நடத்த புலிகளுக்கு அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடக்கும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையை கொழும்பில் நடத்தவேண்டுமென்று நீதியமைச்சர் ஜனப் ஹமீத் விடுதலைப் புலிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியும் விடுதலைப் புலிகளைச் சந்திக்க ஆவலாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுகுறித்து விடுதலைப் புலிகள் சார்பில் எந்தவித முடிவும் மேற்கொள்ளப்படவில்லையென அறியப்படுகிறது.

(152)

### மாகாண பொலிஸ் படையை

## எமது பட்டியல்படி அமைத்தால்

### அரச படைகளுக்கான கட்டுப்பாடு தளர்த்தப்படும்

- படை அதிகாரியிடம் புலிகள்

(யாழ்ப்பாணம்)

''நாங்கள் கொடுத்திருக்கும் பெயர்ப் பட்டியலில் இருந்து மாகாணப் பொலிஸ் படையை அமைத்தால், நாங்கள் இலங்கை அரசாங்கத்தின் படைகளுக்கு விதித்திருக்கும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தத் தயாராக உள்ளோம்''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசின் படை அதிகாரிகளுக்கும் இடையே நேற்றுப் பலாலியில் நடந்த பேச்சுவார்த்தையின்போது தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கப் படை அதிகாரிகள் சார்பில் வட பிராந்தியத் தளபதி, ஜெனரல் சில்வா, நமுனி, வட பிராந்தியக் கடற்படைத் தளபதி ஆகியோர் பங்குபற்றினர். விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரட்னம் யோகி, விடுதலைப் புலிகள் வட பிராந்திய உப தளபதி

(8-ம் பக்கம் பார்க்க)

### குடிசனமதிப்பீடு 1991 மார்ச்சில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

1991-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கையில் நடைபெறவிருக்கும் அடுத்த குடிசன தொகை மதிப்பு ஏறக்குறைய 1 கோடி 75 லட்சம் மக்களைக் கணக்கெடுப்பதாக அமையும் எனத் தெரியவருகிறது.

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் பூர்வாங்கமாக 1991-ம் ஆண்டு குடிசன மதிப்புக்கு ஆரம்ப நடவடிக்கையாக முன்நிரற்படுத்தும் படிவத்தையும், சனத்தொகை வீட்டு வசதி அட்டவணையையும் இலங்கை முழுவதுமுள்ள சுமார் 270 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட மாதிரிக் கண்டத்தில் பரீட்சாத்தமாக கணக்கெடுப்பை நடத்தியுள்ளது.

இதைத் தொடர்ந்து இருபத்தைந்து மாவட்டங்களிலிருந்தும் பெறப்படும் குறை

(8-ம் பக்கம் பார்க்க)

### 50 கோடி ரூபா இழப்பு

(கொழும்பு)

தென்னம் சாராயம், கல்லோயா சாராயம் என்பவற்றில் கலப்படம் செய்வதனாலும், கள்ளத்தனமாக போலி சாராயம் உற்பத்தி செய்து விநியோகிப்பதனாலும், அரசுக்கு 50 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக அரச மதுவடிசாலை தலைவர் திரு ஓ.ஜே. டி.சில்வா தெரிவித்துள்ளார்.

### சீதனக் கொடுமையை

## முற்றாக ஒழித்துவிட போராடவேண்டும்

### விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி யாப்பு மாநாட்டில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

''பெண்ணினத்தின் கௌரவத்துக்கும் சுதந்திரத்துக்கும் இழுக்குத் தருவதும் சமூக சாபக்கேடாக விளங்குவதுமான சீதனக் கொடுமையை முற்றாக ஒழித்துவிடப் போராடுவது''

இவ்வாறான தீர்மானம் ஒன்று யாழ் வின்சர் தியேட்டரில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணி யாப்பு மாநாட்டு இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் நிறைவேற்றப்பட்டது. இம்மாநாட்டுக்கு தலைமைக்குழு உறுப்பினரும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் உப செயலாளருமான செல்வி சுந்தரி தலைமை வகித்தார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு;

★ தமிழீழ சமுதாயத்தில் நிலவும் பெண்களுக்குக் கெதிரான சகல ஒடுக்கு முறைகளையும், அநீதிகளையும் களைந்

(8-ம் பக்கம் பார்க்க)

## "றோ'வின் தவறான பாதையில் இந்தியா தொடர்ந்து செல்கிறது!"

### பாரதீய ஜனதா கட்சி எம்.பி. குற்றச்சாட்டு

(புதுடில்லி)

இந்திய புலனாய்வு துறையான 'றோ' மீது பாரதீய ஜனதாகட்சி எம். பி. திரு. ஜஸ்வத் சிங் கடும் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்திய மத்திய அரசை அது தற்போதும் தவறான பாதையில் இட்டுச் செல்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

லோக்சபாவில் கடந்த வாரம் நடைபெற்ற விவாதத்தின்போது இந்திரா காங்கிரஸ் எம. பி. திரு. குமாரமங்கலம், தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவித்த கருத்திற்கு திரு. ஜஸ்வத் சிங் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்; 'றோ வுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இணக்கமற்ற கருத்து முரண்பாடு ஏற்பட்டதையடுத்து அதுமாத்திரமே ஓர் புலனாய்வு

(8-ம் பக்கம் பார்க்க)

# மீன் நோய்த் தாக்கம் பற்றி உயர்மட்ட ஆராய்ச்சி

## கடற்றொழிலாளருக்கு நிவாரணம் வழங்க கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அக்கரைப் பற்று ஆகிய பகுதிகளில் மீனுக்கு ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கம் குறித்து உயர்மட்ட ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப் படவுள்ளன.

மீன் நோயியல் சிறப்பு நிபுணர்களை மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்குமாறு உள்நாட்டு மீன்பிடி அத்தியட்சகரிடம் மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் உத்தியோகத்தர் திரு ஏ. ஜே. ஜோர்ஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வாவியில் மீனுக்கு ஏற்பட்ட நோய்த் தாக்கத்தினால் 9000 கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் மட்டக்களப்பு அரச அதிபர் திரு. ஆர். யோகநாதனிடம் திரு. ஜோர்ஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதே வேளை மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் அபிவிருத்தி சம்பந்தமான ஒரு உயர் மட்ட மகாநாடு விரைவில் மட்டக்களப்பு அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு வாவி மீனுக்கு ஏற்பட்ட நோய்த்தாக்கம் குறித்து இங்கினியாக்கலை மீன் விலங்கியலாளர்கள் மேற்கொண்ட ஆய்வு அறிக்கையின் முடிவுகள் பல மாதமாகியும் இன்னமும் அனுப்பி வைக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (121)

## நிவாரணம் வழங்கப்படவில்லை

[வடமராட்சி]

வடமராட்சியில் இடம்பெற்ற வன்செயலால் தொழில் பாதிப்புற்றவர்களுக்கான ரூபா நாலாயிரம் நிவாரணம் கரணவாய் வடக்குப் பிரிவிற்கு ஒருசிலரைத் தவிர பெரும்பான்மையினருக்கு வழங்கப்படவில்லையாம்.

விகிதாசாரப்படி நூற்றுக்கு பத்து வீதத்தினரே இப்பணத்தைப்பெற்றுள்ளார்கள். ஏனையோர் பெரும் பாதிப்புற்று விண்ணப்பம் செய்திருந்தும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை இதுகுறித்து மக்கள் பெரும் அதிருப்திகொண்டுள்ளார்கள். [51]

## நியமனம்

[அச்சுவேலி]

அச்சுவேலி தங்கம் வைத்திய சாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி பாமலோஜனி பஞ்சலிங்கம், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளராக நியமனம் பெற்றுள்ளார். இவர் மருத்துவ பீடத்தின் நுண்ணியல் பகுதி விரிவுரையாளராக நியமனம் பெற்றுள்ளார். (74)

## பாடசாலையை விட்டு வெளியேறும் ஒவ்வொரு மாணவனும் சுயதொழில் பெற வாய்ப்பு வேண்டும்

(உடுவில்)

பாடசாலையைவிட்டு வெளியேறும் ஒவ்வொரு மாணவனும் சுயதொழில் வாய்ப்பை பெற்று தமது வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதே முறைசாராக கல்விப் பிரிவினரின் முக்கிய நோக்கம். பாடசாலையை விட்டு விலகுவோர் தமக்குப் பிடித்தமான – தாம் சுய தொழிலில் ஈடுபடக்கூடிய பயிற்சி நெறி யொன்றினை தெரிவுசெய்து கற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சி நெறிகளில் பயிற்சிபெறுவதை அனுமதிக்கமுடியாது''

இவ்வாறு யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள முறைசாரா கல்விப்பிரிவைச் சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் கூறினார்.

இணுவில் சைவப் பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற உடையமைத்தல் கண்காட்சி விழாவில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார். அதிபர் திரு. அ. கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. பாலகிருஷ்ணன் மேலும்கூறியதாவது:

முறைசாரா கல்விப்பிரிவின் பல கற்கை நெறிகளை சில மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் பயின்று வருகின்றனர். ஒருகற்கை நெறியில் பயிற்சி பெற்றவர்கள் தாம் பெற்றுக் கொண்ட பயிற்சியினை அடிப்படையாக வைத்து சுயவேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ள வேண்டும். அதனை விடுத்து ஒவ்வொரு வருடமும் புதுப் புது கற்கை நெறிகளில் தம்மை ஈடுபடுதிக்கொள்வதால் பலமாணவர்கள் முறைசாராக் கல்வி பிரிவின் கீழ் பயன்பெறும் சந்தர்ப்பத்தை தடுப்பதுடன், முறைசாராக் கல்வியின் நோக்கத்தினை பலவீனப்படுத்துவதாகவும் அமையும்.

அடுத்த ஆண்டு முதல் ஒரு முறைசாரா கற்கைநெறியினை பயின்றவர் பிறிதொரு கற்கை நெறியினைபயில்வது தவிர்க்கப் படும். அத்துடன் தற்போதுஒருவர் ஒன்றுக்குமேற்பட்ட பயிற்சியினை எமக்குத் தெரியாமல் ஒரே வருடத்தில் பயின்று வருவதும் அறியப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுமுதல் ஒருவர் இரு பயிற்சி நெறிகளை பயில்வது தடைசெய்யப்படும். இதனை மீறி ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சி நெறிகளை யாராவது பயில்வது கண்டு பிடிக்கப்பட்டால், அவர் பயிலும் சகல பயிற்சிகளிலும் இருந்தும் அவர் நீக்கப்படுவார்

பாடசாலை மாணவர்கள்கூட முறைசாராக் கல்வியினை பயில்வதாக தெரியவருகிறது. முறைசாராக் கல்வி பாடசாலையை விட்டு விலகியமாணவர்களுக்குரியதாகும். இதுவரை காலமும் முறைசாராக் கற்கை நெறிகளுக்கு மாணவரை தெரிவு செய்யும்போது அவர்களின் பாடசாலை விடுகை பத்திரத்தை நேர்முகப்பரீட்சையின்போது பார்வையிட்டபின் அவர்களிடம் திருப்பி ஒப்படைத்து விடுகின்றோம். பாடசாலையில் பயிலும் மாணவர் ஏதோ ஒருவகையில் விடுகை பத்திரங்களை பாடசாலைகளில் இருந்து பெற்று எமக்கு சமர்ப்பித்துவிட்டு, மீண்டும் அவற்றை பாடசாலைகளில் கொடுத்து வகுப்புக்களில் சேர்ந்து கொள்கின்றார்கள். எனவே அடுத்த ஆண்டில் இருந்து முறைசாராக்கல்விக்கு தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் பாடசாலை விடுகை பத்திரங்களை நாம் சேகரித்து வைத்துக்கொள்வோம். நேர்முக பரீட்சையின்பின் விடுகை பத்திரம் அவர்களிடம் ஒப்படைக்கப்படமாட்டாது.''

(109)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

3'', 4'' கொங்கிறீட் கற்கள் விற்பனைக்குண்டு. S.சாமிநாதர், இல. 20, மாட்டின் றோட், யாழ்ப்பாணம். (சி 3912)

### புலமைப்பரிசில் பரீட்சை - 1990

ஆண்டு 5- புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 3.00 — 6.00 வரை நடைபெறுகிறது. வெளிமாணவர்களும் தோற்றலாம். விபரங்களுக்கு எலைற் இன்ஸ்ரிரியூட் (வண்ணை தபாலகம் முன்பாக), 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி–3917)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Prima Lohmann சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறோயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற்குஞ்சுகள் Golden Comet, HylineBlack, பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி 3838)

### தவறிவிட்டது

காரைநகர் மேற்கு மாதடையை சேர்ந்த இராசையா தேசிங்கராசா என்பவரின் அடையாள அட்டை 26-5-90 சனிக்கிழமை மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் ஈழநாடு அலுவலகத்தில் அல்லது மேற்படி விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். (சி–4001)

ஆறுமுகம் தர்மலிங்கம் 7-ம் வட்டாரம் நயினாதீவு என்பவருடைய அடையாள அட்டை இல. 442641862V மற்றும் மக்கள் வங்கி ரசீற்றுகளும் யாழ். ஓட்டுமடம் சந்திக்கும் ஆறுகால் மடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். சிறீகாந் புத்தகசாலையில் ஒப்படைக்கவும். (சி-3918)

### வாழ்க்கை திறன்கல்வி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மவட்டத்தில் 1991 ம் ஆண்டுக்கு மேலும் முப்பது பாடசாலைகளின் வாழ்க்கைத் திறன் கல்வி போதிப்பதற்கு ஏற்பாடாகியுள்ளன. (125)


வர்த்தகப் பெருமக்களினதும் வாசகர்களினதும் வேண்டுகோளுக்கமைவாக

ஈழநாடு தனது விசேட விளம்பர கருமபீடம் ஐ. ஜே. ரி. பீரிஸ், 448, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரியில் இயங்குகின்றது

சகல விளம்பரங்களும் காலை 9 மணி முதல் விசேட விளம்பர கருமபீடத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஈழநாடு லிமிட்டெட்

63, சிவன்கோவில் மேற்கு வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ 773)



## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

பிறப்பு :

1 - 5 - 1896

இறைவன் அழைப்பு

29 - 4 - 1990



திருமதி தம்பிஐயா மீனாட்சியம்மா
(அகிலாண்டம்)

நூற்றாண்டுகாலம் எம்முடன் வாழ்ந்து எம்மை எல்லாம் வாழ்வித்து இயற்கை எய்திய எம்குலதெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு (29-5-1990) இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் வீட்டுக்கிரியைகளிலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறும், மதியபோசனத்தில் பங்குபற்றுமாறும், உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் கார்த்திகேசு தம்பிஐயாவின்
பிள்ளைகளும், மருமக்களும்,
பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளும்.

நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில். (ஏ 772)

## 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு :

24-3-1932

உதிர்வு :

29-4-1990

அமரர் கணபதிப்பிள்ளை சின்னராசா

29–4–1990 அன்று இறைவனடி சேர்ந்த அமரர் கணபதிப்பிள்ளை சின்னராசா அவர்களது அந்தியேட்டி 29-5-1990 (இன்று) செவ்வாய்க்கிழமை அன்னாரது வடலியடைப்பு இல்லத்தில் நடைபெறும்.

அவரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும் மனைவி பவளநாயகி(கிளி), மகன் லோகராசா (பிரான்ஸ்), மருமகள் ஜான்சி, பேரன் வின்சன் ஜோயல், மகன் அருள்நேசராசா (சவூதி அரேபியா), மகள் இந்திராதேவி(ஆசிரியை) மருமகன் லோகநாதன் (கே. எஸ். பி. நூர்ஸ்) மகள் றெஜினாதேவி, மற்றும் மைத்துனர்கள், மைத்துனிமார்.

கலைவாணி வீதி,
வடலியடைப்பு. (சி 3916)

# பாகிஸ்தானில் இனமோதல் தொடர்கின்றது

# தென்மாநிலங்களில் 89பேர் கொலை

## வீதிகளெங்கும் இராணுவ மயம்

(கராச்சி)

**பாகிஸ்தானின் தெற்கு மாநிலங்களில் கடந்த இரு தினங்களாக இடம்பெற்ற இனக் கலவரங்களில் பொலிஸார் உட்பட 89 பேர் கொல்லப்பட்டுள்ளனர். நாநூறுக்கும் மேற்பட்டவர்கள் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது;- பாகிஸ்தானின் தென் மாநிலங்களான கராச்சி, ஹைதராபாத், சிந்து மாநிலங்களில் முஸ்லிம்களிடையே இரு பிரிவினர் மத்தியில் இடம்பெற்றுவந்த கலவரங்களின் உச்சக் கட்டமாக இக்கொலைகள் நடந்துள்ளன.

ஹைதராபாத்தில் கடந்த சனிக்கிழமை முஸ்லிம் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற கலவரத்தில் 30 பேர் கொல்லப்பட்டனர். நகரக் கடைகள், அரச அலுவலகங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. கொல்லப்பட்டவர்களில் பெருமளவினர் சிறுவர்களும் பெண்களுமே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கராச்சியில் நடந்த மற்றொரு சம்பவத்தில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டோர் மீது கார் ஒன்றில் வந்த முகமூடி அணிந்த இருவர் சுட்டதில் 38 பேர் பலியானார்கள். இத்தாக்குதலில் மேலும் 10 பொலிஸாரும் கொல்லப்பட்டனர்.

சிந்து மாகாணத்தில் இடம்பெற்ற கலவரத்தில் தொழுகையை முடித்துக்கொண்டு வந்தவர்களுக்கும், பொலிஸாருக்குமிடையில்பெரும்மோதல் ஏற்பட்டது. இதன்போது பொலிஸார் சுட்டதில் 11பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தென் மாநிலங்களில் காலவரையற்ற ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டதுடன், இப்பகுதியில் ராணுவம் டாங்கிகள் சகிதம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. (சி)

---

### சித்திரவதை செய்து

# 77பூனைகள்கொலை குற்றவாளிக்கு 5-வருட தண்டனை!

(நியூயோர்க்)

பூனைகளை சித்திரவதை செய்து கொலை செய்து அவை இறந்தபின் அதனை படமெடுத்து அல்பம் ஒன்றில் சேகரித்து வந்த இளைஞர் ஒருவருக்கு 5 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஜோர்ஜியா மாநிலத்தில் நடைபெற்ற இச்சம்பவங்கள் குறித்து மேலும் தெரிய வருவதாவது; சட்டக் கல்லூரியில் பட்டப் படிப்பினை மேற்கொண்டுவரும் மிச்சேல் முனுஸ் (வயது-34) என்பவர் இவ்வாறு கொடூரமான சித்திரவதை செய்து 77பூனைகளை கொலைசெய்துள்ளார்.

பூனைகளை சித்திரவதை செய்து பின் யன்னல் திரைசீலைகளால் அவற்றின் கழுத்தில் சுருக்குப்போட்டு நெரித்தும், தண்ணீர் பேஸின்களினுள் இவற்றை அமுக்கி மூச்சுத் திணறவைத்தும் கொலை செய்வார். இவ்வாறான வேளைகளில் பூனைகள்படும் மரண அவஸ்தைகளை படிப்படியாக புகைப்படம் எடுத்து அல்பங்களில் சேகரித்து வந்துள்ளார்.

அண்மையில் இவர் இவ்வாறான சித்திரவதைக் கொலையொன்றை புரிந்துகொண்டிருந்த வேளையில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார். ஜோர்ஜியா மாநில நீதிமன்றமொன்று இவரது செயலை கடுமையாக எச்சரித்து 5வருட கடுங்காவல் தண்டனை விதித்துள்ளது. (சி)

---

### எவ்வேளையிலும்

# 'பனிப்போர்' துவங்கலாம்! கொர்பச்சேவ் எச்சரிக்கை

(மாஸ்கோ)

அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் தற்போது சுமுக உறவுகள் நிலவுகின்ற போதிலும் மீண்டும் எவ்வேளையிலும் 'பனிப்போர்' துவங்கும் சந்தர்ப்பங்களும் அதிகரித்து வருவதாக சோவியத் அதிபர் திரு. கொர்பச்சேவ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் பத்திரிகையொன்றிற்களித்த பேட்டியில் திரு. கொர்பச்சேவ் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த ஆறு மாதங்களுக்கு முன் இரு நாடுகளுக்குமிடையில் இருந்த உறவைவிட தற்போது உறவுநிலை பெருமளவு மேம்பட்டுள்ளது. இரு தலைவர்களும் ஒருவரையொருவர் நம்புகிறோம். எனினும் இருதரப்பு உறவையும் மேலும் மேம்படுத்த அதிக முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் இது கட்டாய அவசியம். எனினும் எவ்வேளையிலும் பனிப்போர் துவங்கும் அபாயம் உள்ளது. இதனை நன்குணர்ந்தே செயற்படவேண்டும்.

---

### எல்சல்வடோர் உள்நாட்டு யுத்தத்தில்

# 75ஆயிரம் பேர்பலி

## 8,000 படை வீரர்களாம்

(எல்சல்வடோர்)

எல்சல்வடோரில் அரசு படைகளுக்கும் இடதுசாரி சல்வடோரியன்' கெரில்லாக்களுக்கு மிடையில் கடந்த 10 வருடங்களாக நடைபெற்று வரும் உள்நாட்டு போரில் சுமார் 75,000 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க ஆதரவுடன் எல்சல்வடோர் அரசு அந்நாட்டில் பிரிவினை கோரி போராடி வரும் 'பரபின்டோ மாற்ரி தேசிய விடுதலை முன்னணி'யை அடக்க பலத்த தாக்குதலை மேற்கொண்டு வந்த போதும்கெரில்லாக்கள் இதனை சமாளித்து வருகிறார்கள்.

இதுவரை கெரில்லாக்களின் தாக்குதலில் 8,000 ற்கும் மேற்பட்ட படையினர் பலியானதாகவும் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. எனினும் அரசு இதனை மறுத்துள்ளது. கெரில்லாககளின் தரப்பிலேயே பெருமளவு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளைமேற்படி கெரில்லா அமைப்பு எல்சல்வடோரில் நூற்றுக்கணக்கான மக்களை கொலை செய்துள்ளதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. (சி)

---

### வன்னேரி - தேவன்

# குளங்களை இணைக்க உதவுமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வன்னேரிக்குளம், தேவன்குளம் இரண்டையும் இணைத்துப் பாரிய நீர்த்தேக்கம் ஒன்றை நிர்மாணித்துத் தருமாறு வன்னேரிக்குளம் விவசாயிகள் சார்பில் வன்னேரிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தூதுக்குழுவினர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.மாணிக்கவாசகரைக்கேட்டுள்ளனர்.

வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட நடமாடும் செயலகத்தில் வைத்தே அரச அதிபரிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

வன்னேரிக்குளம் பிரதேசத்தில் பெருந்தொகைப் பனை இருப்பதால் இப்பகுதி இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்பைக் கருதி பனம்பொருள் பேட்டை ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்றும் வன்னேரி மகாவித்தியாலயத்தின் விஸ்தரிப்புக் கருதி விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றை நிறுவித் தருமாறும், ஆசிரியர் பற்றுக் குறையை நிவர்த்திக்குமாறும் இவர்கள் தமது சங்க மூலம் கோரிக்கை விடுத்தனர்.

மின்சார வசதி, தந்தி, தொலைபேசி சேவை, குழாய்க் கிணறு அமைத்தல், விவாக பிறப்பு இறப்புப் பதிவாளர் ஒருவரை நியமித்தல் முதலான கோரிக்கைகளையும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அரச அதிபரிடம் முன் வைத்தனர். (83)

---

# கொள்வனவு விலையில் வேறுபாடு: உத்தரவுபெற்ற வர்த்தகர்கள் மனமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் இது காலவரை பொருள் கொள்வனவு செய்து வந்த யாழ். உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் பலர் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் தம்மை இணைக்குமாறு கோரும் மகஜர் ஒன்றை யாழ். உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

யாழ். உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் சங்கத்தின் செயலாளர் திரு. பா. லிங்கநாதன் இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளார்.

யாழ், மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கொள்வனவு விலையில் வேறுபாடு இருப்பதாகவும், இடத்திற்கிடம் வேறுபாடான விலையில் பொருட்களை பொது மக்களுக்கு விற்பனை செய்வதில் வர்த்தகர்களுக்கு சிரமங்கள் ஏற்படுவதாகவும் அந்த மகஜரில் சுட்டிக் கட்டப்பட்டுள்ளது.

சீனி, மா போன்ற அத்தியாவசியபாவனைப்பொருட்கள் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் பார்க்க யாழ். மாநகர பல நோக்கு கூட்டுறவுசங்கத்தில்கூடிய விலைக்கு தமக்கு வழங்கப்படுவதாகவும் இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (123)

---

# மரவேலைப் பயிற்சி: மாங்குளத்தில் ஆரம்பம்

(நெடுந்தீவு)

தேசிய நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிலையத்தின் (ஐ. சி. ரி. ஏ. டி.) அனுசரணையுடன் 'கெயர்' ஸ்தாபனத்துடன் இணைந்து தென்னிந்திய திருச்சபையின் மாங்குள தொழில் நுட்ப நிறுவனம் இளைஞர்களுக்கான மரவேலைப் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது

இதற்கான சகல ஏற்பாடுகளையும் திருச்சபையின் பதில் சேகரக் குரு அருட்திரு நரேந்திரனனுகூலன் செய்துள்ளார். பதினைந்து வயதிற்கு மேற்

(5-ம் பக்கம் பார்க்க)

---

### ரூ. 2 ஆயிரம் நிவாரண உதவி:

# 35,000 பேருக்கு வழங்கப்படவில்லை!

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முதல்முறையாக 900 குடும்பங்களுக்கு தொழிற்பாதிப்புக்கான நிவாரண உதவித் தொகை ரூபா 4000 வழங்கப்பட்டது.

இப்பிரிவில் இடம் பெயர்ந்தவர்களுக்கான உதவித் தொகை இரண்டாயிரமும். தொழிற்பாதிப்புக்கான உதவி 4000 ரூபாவும் ஏற்கனவே மண்டைதீவு கிராமத்திற்கு மட்டுமே வழங்கப் பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது.

வேலணைகிழக்கு, புங்குடுதீவு வடமேற்கு, அல்லைப்பிட்டி, ஆகிய பகுதிகளுக்கும் தொழிற்பாதிப்புக்கான 4000 ரூபா முதல் முறையாக வழங்கப்பட்டது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆயிரம் குடும்பங்களுக்கு தொழிற்பாதிப்புக்கான நிவாரண உதவித் தொகை சென்றவாரம் யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்கப்

(5-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

வறுமையால் வருந்துவோனுக்கு ஒரு கைப்பிடி தானியம் பெரிதாய்த் தோன்றுகிறது. செல்வம் வந்துவிட்டால் அவன் இந்த உலகத்தையே புல் என மதிக்கிறான்.

—பர்த்ருஹரி நீதி

## நமது நோக்கு

# மாவின் ஆக்கிரமிப்பு அகல வேண்டாமோ?

உரத்தின் விலை குறைக்கப்பட்டதாகச் செய்தி வந்தது; விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

சீனி, அரிசி விலைகள் குறைந்துவிட்டதென்று அறிவித்தல் வந்தது; ஓரளவு நிம்மதி மூச்சுப் பலரிடம் காணப்பட்டது.

ஆனால், மா, பாண் ஆகியவற்றின் விலைகளில் மீண்டும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவிப்பு வந்ததும் மீண்டும் முணுமுணுப்புக் கேட்கின்றது.

எமது நாடு பாண் உணவிற்கு அடிமையாகிவிட்டது; எனவேதான் பாண் விலையேற்றம் என்றதும் பொதுமக்கள் பாதிப்படைந்து அரசுக்கெதிரான கொதிப்பை வெளிப்படுத்துகிறார்கள்.

கோதுமை மா, பாண் ஆகியவற்றின் ஆக்கிரமிப்பிலிருந்து நாடு விடுதலை பெற்றால்தான் நாட்டின் சுபீட்சத்தை உறுதிப்படுத்த முடியும்.

அசாதாரண சூழ்நிலையில், நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடிய நிலையில் பிற நாடுகளிலிருந்து மா இறக்குமதி செய்யப்பட்டது. பலவகைச் சிற்றுண்டிகளுக்கும் மாவின் பாவனை அதிகரித்தது.

இதனால் விளைந்த கேடு என்ன? உள்ளூரிலே உற்பத்தியாக்கப்பட்ட குரக்கன் போன்ற பல சிறு தானியங்களைப் பயன்படுத்துவதை மக்கள் கைவிட்டு வந்தனர். அவற்றின் உணவுச்சத்தின் பெறுமதியைக்கூட மறந்துவிட்டனர்.

சில உதவித் திட்டத்தின் கீழ் மா இறக்குமதி செய்யப்பட்ட காரணத்தால், மாவின் பாவனையைக் குறைக்க மக்களுக்கு எவ்வித தூண்டலும் இல்லாமற் போய்விட்டது.

தற்போது, வருடாந்தம் நூறுகோடியே எழுபதுலட்சம் ரூபா பெறுமதியான கோதுமை மாவை அரசு இறக்குமதி செய்கின்றது; மாதாந்தம் முப்பத்தையாயிரம் தொன் இறக்குமதியாகின்றது.

பாணின் விலையதிகரிப்பு மூலம் அரசாங்கம் மக்களுக்குத் தெரிவிக்கும் செய்தி என்ன?

படிப்படியாக மாவின் இறக்குமதி குறைக்கப்படும்; உள்ளூரில் கௌபி, பயறு, குரக்கன் போன்றவற்றின் உற்பத்தியும் பாவனையும் அதிகரிக்க வேண்டும்.

இவற்றின் உற்பத்தியில் ஊக்கம் தருவதற்காக பல்வேறு உத்திகள் கையாளப்பட்டு வந்தன.

மாணுக்கரின் மதிய உணவிற்கு உள்நாட்டு உற்பத்திகளையே பயன்படுத்த வேண்டுமென்ற விதி இருந்தது.

இன்றும் கூட, உள்நாட்டுஉற்பத்திகளில் தயாரிக்கப்படும் மதிய உணவிற்குத்தான் முத்திரை வழங்கப்படுமென்பது விதி.

ஆண்டாண்டு காலமாக, இலவச அரிசி, கூப்பன் முறை. உணவுமுத்திரை போன்ற சலுகைகளைப்பெற்ற மக்கள், புதிய போக்குகளையும் உள்ளூர் உற்பத்திப் பெருக்கத்திற்கான மனப்பாங்கினையும் பெறத் தவறிவிட்டனர் என்றுதான் கூறவேண்டும்.

நாட்டின் தற்போதுள்ள பொருளாதாரச் சிக்கல் நிலையில், உள்ளூர் உற்பத்தியைப் பெருக்குங்கள். மாவின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடுங்கள் என்பதுதான் மா, பாண் ஆகியவற்றின் விலையேற்றம் கொடி காட்டுகிறதா?

## சிரமதானம்

[நாவற்குழி]

பச்சிலைப்பள்ளி நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில் தர்மக்கேணிமக்களும், கிராம சேவையாளர்களும் ஒன்றிணைந்து பளை அரசினர் வைத்தியசாலை வளவை சிரமதானம் மூலம் துப்பரவு செய்தனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் இவ்வைத்தியசாலைக்கட்டிடம் துப்பரவு செய்யப்பட்டு, தீந்தை பூசுவதற்கான ஏற்பாடுகளை நோயாளர் நலன்புரிச்சங்கத்தினாலும், தென்மராட்சி சுகாதாரப்பிரிவு விடுதலைப்புலிகளினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (107)

## பலதும் பத்தும்

### புரிகிறதா.... சின்னம்....?

ஒவ்வொரு கட்சியினரும் தமது கட்சிக்கெனச் சின்னங்கள் அமைக்கிறார்களல்லவா? அந்தச் சின்னத்திலேயே அக்கட்சியின் கொள்கையும் மிளிரும்...!

அந்தவகையில்... விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கட்சிச் சின்னத்தின் தாற்பரியம்தான் என்ன...?

மூவர்ணங்களைக் கொண்டிருக்கின்றது; மஞ்சள் நிறம்...? தமிழ், முஸ்லீம் மக்களின் சுயநிர்ணயப் போராட்டம் அறத்தின் பாற்பட்டது என்பதைக் காட்டுகிறது.

சிவப்பு...? புரட்சிப்போராட்டத்தைச் சுட்டுகிறது.

கறுப்பு...? மக்களின், போராளிகளின் மன உறுதியை வெளிப்படுத்துகிறது.

மஞ்சள் நிறப்புலி நடுவிலேயுள்ளதல்லவா? நாட்டுப் பற்றிலே 'புலி' போன்றவர்கள் என்ற உறுதிப்பாட்டையும் மக்களோடு இணைந்த பிணைப்பையும் குறிக்கின்றது.

நெற்கதிர்கள், விவசாயத்தையும், நங்கூரம் மீன்பிடியையும், சக்கரம் கைத்தொழிலையும் குறிக்கின்றன; பிரதான முத்தொழில்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்.

சக்கரம் நங்கூரத்தின் இரு முனைகளிலும் தங்கி நிற்பது அறிவியலையும், தொழில் நுட்பத்தையும் மேம்படுத்துவதற்கான அக்கறையையும் காட்டுகிறது.

விபரமாக அறியவேண்டுமோ...? 'விடுதலைப்புலிகள்'—14-வது குரல்—படித்துப்பாருங்களேன்...!

வாணி

மாணவர் மலர்ச்சிக்காக...... **சமூகவியல்**

## சூரிய குடும்பம்:

சூரிய குடும்பத்தில் சூரியனைவிட ஒன்பது கிரகங்கள் அவையாவன சூரியனிலிருந்து தொடங்கும்போது புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி, யுறேனஸ், நெப்தியூன், புளூட்டோ என்பனவாகும். இவையாவும் சூரியனைச்சுற்றி நீள்வளையப்பாதை ஒழுக்கிலே வலம்வருகின்றன. புவிக்கும், சூரியனுக்கும் இடையேயுள்ள புதனும், வெள்ளியும் புவக்கு உட்கிரகங்கள் எனவும் ஏனைய ஆறும் வெளிக்கிரகங்கள் எனவும் அழைக்கப்படும். சந்திரன் பூமியின் உபகிரகமாகும்.

**சூரியன்:** சூரியன் ஒரு உடு (நட்சத்திரம்) ஆகும். இது எமக்கு மிக அண்மையில் இருப்பதால்தான் பெரியதாகவும், பிரகாசமாகவும் தென்படுகின்றது. புவியிலிருந்து சுமார் 150 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்திலிருக்கும் சூரியனிலிருந்து அதன் ஒளி புவியை வந்துசேர எடுக்கும் நேரம் 8 1/3 நிமிடமாகும். (8 நிமிடம் 20 செக்கன்) கோளவடிவான சூரியனின் விட்டம் சுமார் 1,390,000 கிலோ மீற்றராகும். இது தன் அச்சில் ஒரு முறை சுழல எடுக்கும் காலம் 30 நாட்களாகும். சூரியனால்தான் புவியில் காற்று, மழை என்பன உண்டாகின்றன.

**புதன்:** ஞாயிற்றுக் குடும்பத்தில் மிகவும் சிறிய கோள் புதனாகும். இதன் சுழற்சிக்காலமும், சுற்றுகைக் காலமும் 88 நாட்களாகும். இதன் சுழற்சிக்கும், சுற்றுகைக்கும் ஒரே அளவான காலம் எடுப்பதால்தான் இதன் ஒரு பாதி சதா பகலாகவும், ஒரு பாதி சதா இரவாகவும் இருக்கின்றது. ஆனால் பூமி தன்னைத் தானே ஒரு முறை சுற்ற 24 மணித்தியாலம் எடுப்பதால் அதன் எல்லாப்பாகங்களும் இரவு பகலை அனுபவிக்கின்றன. புதன் சூரியனைப் பார்த்த பக்கத்தின் வெப்பநிலை 315 செல்சியஸ் பாகையாகவும், சூரியனைப் பார்க்காத பக்கத்திற்கு வெப்பநிலை 170 செல்சியஸ் பாகையாகவும் இருக்கும்.

**வெள்ளி:** (சுக்கிரன்) புவிக்கு மிக அண்மையில் உள்ளது வெள்ளியாகும். இது சூரியன் உதயமாகு முன் கிழக்கு வானிலும், அஸ்தமித்தபின் மேற்கு வானிலும் காணலாம். இது சூரியனைச் சுற்றிவர எடுக்கும் காலம் (சுற்றுகைக்காலம்) 224 நாட்களாகும் இது தன்னைத்தானே சுற்ற (சுழற்சிக்காலம்) எடுக்கும் காலம் இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை. பலர் பலவிதமாக கூறுகின்றனர்.

**புவி:** இது கோளவடிவானதாகும். இதன் வட முனைவும், தென்முனைவும் சிறிது தட்டையாகக்காணப்படுவதால் இதனை ஒரு தோடம்பழ வடிவத்திற்கு ஒப்பிடலாம். மத்திய கோட்டுப்பகுதியில் சற்றுப் பெருத்தும் காணப்படும். புவியின் வட துருவத்தையும், தென் துருவத்தையும் இணைக்கும் கோடு 7900 மைல்களாகும். மத்திய கோட்டினூடாகச் செல்லும் விட்டம் 7927 மைல்களாகும். இதன் சுழற்சிக்காலம் 23 மணி 56நிமிடம். (அண்ணளவாக 24 மணி)

**செவ்வாய்:-** இதன் சுழற்சிக்காலம் சுமார் 23½ மணித்தியாலம், சுற்றுகைக்காலம் 687 நாட்களாகும். இதன் அச்சும் புவியன் அச்சைப்போல 24 பாகைசாய்ந்திருக்கிறது. இதனால் செவ்வாயிலும் பருவமாற்றங்கள் ஏற்படலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். செவ்வாயில் உயிர்வாழ்க்கை இருப்பதாக இதுவரை எந்த சான்றுகளும் இல்லை. ஒட்சிசன் இன்மையால் இது செந்நிறமாகக் காணப்படுவதால் இதைச் ''செங்கோள்'' எனவும் அழைக்கப்படுகிறது.

இக் கோள்பற்றிய தகவலைப் பெறுவதற்கு மரினர் 9 என்ற விண்வெளிக் கலங்கள் பயன்படுகின்றன. இதன் விட்டம் 4200 மைல்களாகும். இதற்கு இரண்டு உபகோள்கள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

**வியாழன்:-** ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள பெரிய கோள் வியாழனாகும். இது புவியிலும் 11 மடங்கு பெரியது. இதன் விட்டம் 88,800 மைல். ஆனால் சூரியனின் பருமனிலுல் பத்தில் ஒரு பங்காகும். செக்கனுக்கு எட்டு மைல் வேகத்தில் செல்லும் இக் கிரகம் சூரியனை ஒருமுறை சுற்றிவர 11 வருடங்கள் 315 நாட்கள் (11. 86 வருடங்கள்) எடுக்கின்றன. இது தன்னைத் தானே ஒருமுறை சுற்றிவர 9மணி 55 நிமிடம் எடுக்கின்றது இதற்கு 16 உப கிரகங்கள் உண்டு என்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. துணைக் கோள்கள் மதிகள் என்றும் அழைக்கப்படும்.

**சனி:-** வியாழனிற்கு அடுத்தபடியாக பருமனிற் பருத்தது சனியாகும். இக் கிரகத்தைச் சுற்றி மெல்லிய தட்டையான வளையங்கள் காணப்படுகின்றது. இதன் சுழற்சிக் காலம் 10 மணி 14 நிமிடம், இதன் சுற்றுகைக் காலம் 29 வருடம் 166 நாட்களாகும். சனிக்கிரகத்திற்கு 11துணைக் கோள்கள் உண்டு. அவற்றுள் மிகப்பெரியது தைதன் (titan) என்பதாகும். ஞாயிற்றுத் தொதியில் உள்ள இரண்டாவது பெரிய சந்திரன் இதுவாகும். வளிமண்டலத்தைக் கொண்டுள்ள சந்திரனும் இதுவாகும்.

**யுரேனஸ்:-** இதன் சுழற்சிக் காலம் 10 மணி '45 நிமிடம். சுற்றுக்கைகாலம் 84 ஆண்டுகளாகும். சனிக்கிரகத்திற்கு அப்பால் உள்ளதால் இக்கிரகத்தைப் பார்ப்பதற்கு தொலைக் காட்டியை பயன்படுத்துவது அவசியமாகும். இதற்கும் 5 உப கிரகங்கள் உண்டென அறியப்படுகிறது.

**நெப்ரியூன்:-** இதன் சுழற்சிக்காலம் 15 மணி 39 நிமிடம். சுற்றுகைக்காலம் சுமார் 165 ஆண்டுகளாகும். சூரியனிலிருந்து அதிக தூரத்திலிருப்பதால் இது அதிக குளிராகவிருககும். இதற்கு இரண்டு உப கிரகங்கள் இருப்பதாக அறியப்படுகிறது. இதனையும் தொலைநோக்கியினால்தான் பார்க்க முடியும்.

**புளூட்டோ:-** இதன் சுழற்சிக்காலம் இதுவரை அறியப்படவில்லை. சுற்றுற்கைக் காலம் 248 ஆண்டுகளாகும். இதுவும் சூரியனிலிருந்து தூரத்திலிருப்பதால்குளிரான கோளாகவே கருதப்படுகிறது. இதைச்சுற்றி ஒரு உப கோள்வருவதாகக் கண்டுபிடிக்கப்படுகிறது.

தொகுப்பு: க. சந்திரசேகரம். நாவற்குழி ம.வி.

இன்று சேக்கிழார் தினம்

# பெரிய புராணம் தந்த பெரியவர் சேக்கிழார்!

அளவையூர் செ. நடராசா

தொண்டை நாட்டின் 24 கோட்டங்களில் ஒன்றான புலியூர்க் கோட்டத்திலுள்ள குன்றத்தூரிற் பிறந்தவர் அருண்மொழித்தேவர்; இவரே பின்னர் சேக்கிழார் எனப் புகழ் பெற்றார்.

இவரது பெரும் புலமையைக் கேள்வியுற்ற அநபாயச் சோழன் தனது அமைச்சரவைத் தலைவனாக நியமித்தான்.

சேக்கிழாரின் நல்லாட்சித் திறனையும், குடிமக்களிடத்து அவர் காட்டிய பேரன்பினையும் புரிந்துகொண்ட அநபாய சோழன் அவருக்கு உத்தம சோழ பல்லவன் என்ற சிறப்புப்பட்டம் அளித்துக் கௌரவித்தான்.

சோழன் சமண சமய இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான். அவற்றுள் சீவகசிந்தாமணியும் ஒன்று. சேக்கிழார் தருணமறிந்து சோழனை அணுகி சமண சமயத்தின் சிறுமையினை அவனுக்குப் புரியவைத்தார்.

இதனைக் கேட்டு உளம் மகிழ்ந்த சோழன், 'சிவனடியார்களின் அருட்டிறனை விளக்கும் கதைகளைக் காவியமாகப் பாடித்தரும்படி சேக்கிழாரை வேண்டினான்.

சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடுவதற்கு சுந்தரர் அருளிய திருத்தொண்டத்தொகை, திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி, அடியார்களை வகுத்துப்பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, மூவர் தேவாரத் திருமுறைகள், சேக்கிழார் தலயாத்திரை சென்றபோது முதியோர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்ட செய்திகள்; ஆதியன உறுதுணையாக அமைந்தன.

மடாதிபதிகள், பெரும் புலவர்கள், தில்லை மூவாயிரவர்கள், சைவநெறி தழுவியோர் ஆகிய பெருமக்கள் கூடிய சபையிலே சேக்கிழார் விமரிசையாக புராண அரங்கேற்றம் செய்துமுடித்தார்.

சோழன், சேக்கிழார் பெருமானையும் திருத்தொண்டர் புராணத்தையும் யானைமீது ஏற்றித் தானும் சேக்கிழார்க்குப் பின்னமர்ந்து கவரி வீசிக்கொண்டு தில்லைத் திருவீதி வலம் செய்வித்தான். பின்னர் தில்லைக்கூத்தன் முன் திருத்

(5ம் பக்கம் பார்க்க)

## இராசி பலன்

செவ்வாய்க்கிழமை
29- 05- 1990

மேடம்: ஏமாற்றம், நீசர் உதவி, கடினவாக்கு, மறதி.

இடபம்: கடன்வரவு, இனசன வரவு, கற்பனை, உடல் உபாதை.

மிதுனம்; பிரயாணம், இனசன உதவி, சோம்பல், கற்பனை.

கடகம்: தொழில் நினைவு, ஏமாற்றம், ஆடம்பரச்செலவு, தந்திரப்போக்கு.

சிங்கம்: தொழில் உயர்ச்சி, நற்சிந்தனை, இனசனவரவு, பீடை.

கன்னி: உடல் உபாதை, உழைப்பு, பொய் பேசுதல், பிரயாணம.

துலாம்: வாக்குச்சித்தி, தொந்தரவு, காரிய தாமதம், வெறுப்பு.

விருச்சிகம்: கற்பனை, கடன் வரவு, உபாதை, மறதி.

தனுசு: வீண் யோசனை, இனசனஉதவி, தூரத்துச் செய்தி, காரியத்தடை.

மகரம்: அலைச்சல், பொருள் வரவு, வீரம், தூரத்துச்செய்தி.

கும்பம்: நீசர்நேசம், உஷ்ண வியாதி, கடினவாக்கு, மறதி.

மீனம்: சமூகசேவை, வீண் பழி, செலவு, பிரயாணம்.

இ. மகாதேவா

## இன்று சேக்கிழார்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டர் புராணத்தைக் கொண்டுவந்து திருக்களிற்றுப்படிமேல் வைத்து வணங்கி சேக்கிழார் பெருமானுக்குத் தொண்டர் சீர் பரவுவார் என்னும் சிறப்புப் பட்டம் நல்கி, வரிசைகள் பல வழங்கி மனநிறைவு பெற்ருன்.

சேக்கிழாரின் சமாதி சிறந்த கோவிலாக தில்லை ஞானப்பிரகாசக்குளத்தின் வடகரையில் உள்ளது. இங்கு தினந்தோறும் பூசை நடைபெறுகிறது.

சேக்கிழார் சுவாமிகளின் காலம் 12-ம் நூற்றுண்டின் முற்பகுதி என ஆராய்ச்சி வல்லுனர் கூறுவர்.

## மரவேலைப்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட எட்டாம் வகுப்புச்சித்தி அடைந்தவர்கள் இப்பயிற்சி பெறத்த குதியுடையவர்கள். பயிற்சியாளர் ஒருவருக்கு நாளாந்தப் பயிற்சி ஊக்குவிப்புப் பணமாக முப்பது ரூபா வழங்கப்படவிருக்கின்றது.

இரண்டரை மாதம் நடைபெறும் இப்பயிற்சியை நிறைவு செய்யும் பயிற்சியாளர்களுக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான தச்சுவேலை உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

பயிற்சியின்பின் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு 'கெயர்' நிறுவனத்தால் வழிவகைகள் செய்து கொடுக்கப்படும் என்று அந் நிறுவனத்தின் வடபகுதிப் பொறுப்பதிகாரி திரு. எம். பத்திநாதர் தெரிவித்தார். (133)

# மந்திகை ஆஸ்பத்திரியில் நாய், பூனை, மாடு அட்டகாசம்

(வடமராட்சி)

மந்திகை அரசினர் வைத்தியசாலை வார்ட்டுகளில் நாய் பூனைகளின் தொல்லையும், வார்ட்டுக்கு வெளியில் ஆடு மாடுகளின் தொல்லையும் அதிகரித்துள்ளது.

மந்திகை வைத்தியசாலை வார்ட்டுக்குள்ளும் கட்டில்களின் அடியிலும் நாய்களும், பூனைகளும் அடைக்கலம்கோரி நடமாடிவருவதால் நோயாளர்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகியுள்ளார்கள்.

வார்ட்டின் வெளிப்புறங்களில் ஆடு, மாடுகள் தாராளமாக நடமாடுவதுடன் மலசலம் கழித்தும், மக்கள் போக்குவரத்துச் செய்யும் பாதைகளை அசிங்கப்படுத்தியும் வருகின்றன. இதனை யாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை. (51)

# மாணவர் தொகைக்கு அமைய மாகாணசபை நிதிஉதவி

## மகாநாட்டில் உடனடித் தீர்மானங்கள்

(மட்டக்களப்பு)

''மாணவர்களின் தொகைக்கு அமையவே மாகாணசபையிஞல் நிதி வழங்கப்படும். இப்பணத்தை இன அடிப்படையில் பகிர்ந்து செலவிடவேண்டும்'' என்று சாய்ந்தமருது பாலிகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மகாநாட்டில் வடகிழக்கு மாகாணசபையின் கல்வியமைச்சின் செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராசா தெரிவித்தார்.

கல்முனை கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர் சங்கத்தினர் ஆகியோர் கலந்துகொண்ட இம்மாநாட்டில் இதற்கான இணக்கம் காணப்பட்டது.

கல்முனையைத் தனியான கல்வி மாவட்டமாக மாற்றுமாறு கேட்டதற்கு, அடுத்த மாதம் 9ம் திகதி மட்டக்களப்பில் நடைபெறும் மாகாணசபையின் உயர்மட்ட மாநாட்டில் ஆராய்ந்து ஆவன செய்வதாக திரு. சற்குணராசா கூறிஞர்.

கல்முனைக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட ஆசிரியர்கள் அம்பாறை கல்விப்பணிப்பாளர் அலுவலகத்திஞல் புறக்கணிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

திருக்கோயில் கோட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் தமது சம்பளப் பணத்தைப்பெற அம்பாறைக்குச் செல்லவேண்டியிருப்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

கல்முனைக் கல்விஅலுவலகத்தைச் சேர்ந்த திரு. எம். கணேசமூர்த்தியை உடனடியாகத் தாம் பதில் கணக்காளராக நியமிப்பதாகவும், கட்டிடச் செலவினம் தவிர ஏனைய சகல செலவினங்களுக்குமான பணத்தை கல்முனைக்கு நேராக அனுப்பிவைப்பதாகவும் திரு. சற்குணராசா உறுதியளித்தார்.

திருக்கோயில் கோட்டத்தை ஜூன் மாதம் முதல் அம்பாறையிலிருந்து பிரித்து கல்முனைக் கல்வி அலுவலகத்தின் கீழ் மாற்றுவதாகவும் அவர் உறுதியளித்தார்.

நிதி பற்ருக்குறை காரணமாக 2 வருடச் சம்பள முற்பணக் கடன் வழங்குவது தாமதமாவதும் செயலாளரிடம் தெரிவிக்கப்பட்டது.

இக்கடனை வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும், திட்டமிட்ட அடிப்படையில் வழங்கப்படவில்லை என்றும் கூறிய திரு. சற்குணராசா, பாரபட்சமின்றி ஒழுங்காகக் கடன் வழங்கப்படுமாஞல் அதற்கு வேண்டிய பணத்தை அனுப்பிவைப்பதாகக் கூறிஞர். (121)

# பண்ணிசைப் போட்டியில் பரிசுபெற்ருேர் விபரம்

(உடுவில்)

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு கோவில் பண்ணிசைக் வளர்ச்சிக் குழுவினரால் இணுவில் சைவப் பிரகாச மகாவித்தியாலயத்தில் பண்ணிசைப் போட்டி நடாத்தப்பட்டது.

பண்ணிசைப் போட்டியை யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு விரிவுரையாளர் திரு. என். வி. எம். நவரத்தினம் தலைமைவகித்து நடத்திஞர். போட்டியில் முதலாவது இடத்தை பெற்றவர்களுக்கு தங்கப்பதக்கம் பரிசளிக்கப்படும்.

வெற்றி பெற்ருேர் விபரம் வருமாறு:-

### மேல் பிரிவு

முதலாம் இடம்: செல்வன் குபேரன் ஏரம்பமூர்த்தி (தங்கப்பதக்கம்) இணுவில் சைவப் பிரகாச மகாவித்தியாலயம். 2-ம் இடம்: செல்வி சாந்தி கனகரத்தினம் முத்துத்தம்பி வித்தியாலயம் திருநெல்வேலி. 3-ம் இடம்: செல்வி அகிலா அழகராசா முப்பெரும் இலக்கிய மன்றம் மானிப்பாய்.

### மத்திய பிரிவு

முதலாமிடம்: செல்வன் கஜன் கணபதிப்பிள்ளை (தங்கப்பதக்கம்) இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, இரண்டாமிடம்: செல்வி சௌமியா சற்குணநாதன் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. மூன்ருமிடம்: செல்வி சுகந்தினி இராஜசேகரன் கொக்குவில் இந்துக் கல்லூரி.

### கீழ்ப்பிரிவு

முதலாமிடம்: செல்வி ஹேமதயானி குணநாதன் (தங்கப்பதக்கம்) உடுவில் மகளிர் கல்லூரி. இரண்டாமிடம்: செல்வன் தினேஷ் கணேசலிங்கம் இணுவில் அமி தமிழ்க் கலவன் பாடசாலை. மூன்ருமிடம்: செல்வன் பரந்தாமன் நவரத்தினம் கொக்குவில் இந்துக்கல்லூரி. (190)

## ரூபா 2 ஆயிரம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணத் தொகையை பெருதபலர் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. இடம்பெயர்ந்தவர்களுக்கானஉதவித்தொகைக்கு விண்ணப்பித்தவர்கள் முப்பத்தையாயிரம் பேருக்கு இதுவரை இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. இவ்விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருப்பதாக கிராமசேவை அலுவலர்களின் குறிப்புக்களிலிருந்து தெரியவருகின்றது. (123)

# கொக்குவில் இந்து இன்று பரிசளிப்புவிழா

(கொக்குவில)

கொக்குவில் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

1987ம் ஆண்டில் அதிக புள்ளிகளைப்பெற்ற 97 மாணவருக்கும, 1988ல் 206 மாணவருக்கும், 1989ல் 332 மாணவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும். இவ்விழாவிற்கு திரு. கே. சுப்பிரமணியம் (பொறியியலாளர்), திருமதி சுகிர்தலெட்சுமி சுப்பிரமணியம் (முன்னுள் உதவி அதிபர்)ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார்கள். (135)

# ஆசிரியர் இடமாற்றசபைகள்

(அச்சுவேலி)

ஆசிரியர்களின் இடமாற்றங்களைத் திட்டமிட்ட முறையில் மேற்கொள்வதற்கு வசதியாக மாகாண மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் 'ஆசிரியர் இடமாற்ற சபைகள்' அமைக்கப்பட்டுள்ளன

வடக்கு-கிழக்கு மாகாணம் மற்றும் மாவட்டங்கள் ரீதியாக அமைக்கப்பட்டுள்ள இடமாற்ற சபைகளுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் விபரம்

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான ஆசிரியர் இடமாற்றச் சபைக்கு திரு. த. மகாசிவம் (சங்கப் பொதுச் செயலாளர்) நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண ரீதியில் செயற்படும் இடமாற்ற சபைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் பெயர் விபரம்: யாழ். மாவட்டம் - திரு. த. பஞ்சலிங்கம், மட்டக்களப்பு மாவட்டம் - திரு. வி. த. குமாரசுவாமி, திருகோணமலை மாவட்டம் - திரு. எஸ். தண்டாயுதபாணி அம்பாறை மாவட்டம் - திரு. எஸ். சிவானந்தநாயகம்.

வவுனியா மாவட்டம்-திரு. மு. பாலசுப்பிரமணியம், கிளிநொச்சி மாவட்டம் - திரு. என். சோதிநாதன், முல்லைத்தீவு மாவட்டம் - திரு. அன்ரனி ஜெகநாதன், மன்னர் மாவட்டம் - திரு. எஸ். எஸ். இலெம்பட். (74)

## முதலுதவி பயிற்சி

[நாவற்குழி]

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உள்ள இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட இருக்கின்றது, இதற்கான ஏற்பாடுகளை தமிழீழவிடுதலைப்புலிகள் சுகாதாரப்பிரிவுப் பொறுப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

இயக்கச்சி அ. த. க. பாடசாலையில் இன்று நடைபெற இருக்கும் முதலுதவிப்பயிற்சி வகுப்பில் 16 வயதிற்கு மேற்பட்ட பச்சிலைப்பள்ளிப்பகுதியில் உள்ள இளைஞர்களையும் யுவதிகளையும் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி சுகாதாரப் பிரிவுப் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (107)

## நகுலன்நினைவாக குழாய்க்கிணறு

[நாவற்குழி]

வீரவேங்கை கப்டன் நகுலன் நினைவாக அமைக்கப்பட்ட குழாய்க் கிணற்றின் மூலம் கல்வயல் பகுதியில் குடிநீர்ப்பிரச்சனை தீர்ந்துள்ளது.

சுமார் 22 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த குழாய்க்கிணறும் அதனுடனுள்ள சிறிய கட்டிடமும் பதினெரு நாட்களில் இப்பகுதி மக்களால் செய்து முடிக்கப்பட்டது பாராட்டத்தக்கது என்று கல்வயல் சிற்றூரவைத் தலைவர் திரு. ரூபசிங்கம் தெரிவித்தார்.

நகுலனின் பெற்ருேர் மங்கள விளக்கேற்றிவைக்க, வீரவேங்கை லெப்டினன் ஸ்ராலின் தந்தை திரு. க. வாரித்தம்பி இக்குழாய்க்கிணற்றை மக்கள் பாவனைக்கு திறந்து வைத்தார்.

சுமார் 48 அடி ஆழமான குழாய்க்கிணற்றின் மூலம் குடிப்பதற்கான நல்ல தண்ணீர் கிடைத்துள்ளதால் இப்பகுதி மக்கள் பெருமகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். (107)

## இணக்கசபை ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் இணக்கசபையின் ஆரம்ப தினத்தன்றே பல பிணக்குகள் உடனுக்குடன் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு விசாரணையைக் காண இணக்கமன்றுக்குபெருந்தொகையான பொதுமக்கள் சமூகமாகி இருந்தனர். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட இணக்கசபை பொறுப்பாளர் திரு. அலக்சாண்டரும் மன்றுநடவடிக்கைகளைக்காண வருகை தந்திருந்தார். [85]

## மாணவர்கள் கல்வி சுற்றுலா

(உடுவில்)

முருகமூர்த்தி வித்தியாசாலையைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்களுடன் அண்மையில் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

வித்தியாசாலை துணை அதிபர் திரு. வி. பி. சர்மா தலைமையில், பிரிவுத் தலைவர்கள் திரு. இ. இந்திரன், திருமதி அ. உருத்திரராசசா உட்படப் பல ஆசிரியர்கள் இச்சுற்றுலாவில் கலந்துகொண்டனர். (109)

## கலைவிழா

[வடமராட்சி]

யாழ். பொலிகண்டி அ. மி. த. க. வித்தியாலயம் அண்மையில் வித்தியாலய அரங்கில் அதிபர் திரு. க. இராசதுரை தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக முன்னுள் வித்தியாலய அதிபர் திரு. ஆ. பொன்னையா கலந்து கொண்டார்.

பாடசாலை மாணவமாணவிகளின் நடனங்களும் அபிநய நடனங்களும், நாடகங்களும், ஆங்கில உரையாடல் என்பனவும் பழைய மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [51]

## உற்சவம்

(கிளிநொச்சி)

கிருஷ்ணபுரம் கிருஷ்ண பாரதி ஸ்ரீ அம்பாள் தேவஸ்தான வருடாந்த உற்சவம் அடுத்தமாதம் 8ம் திகதி வெள்ளியன்று மஞ்சள் நீராடும் வைபவமும் தீர்த்தோற்சமும் நடைபெற்று நிறைவு பெறும்.

உற்சவங்களின்போது தீமிதிப்பு, மாவிளக்கு ஊர்வலம், கலை நிகழ்ச்சிகள் முதலானவை இடம் பெறமிகவும் சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (83)

# 'தமிழீழபோராட்டம் தமிழனை தனித்துவப்படுத்துகிறது'

— ஆஞ்சநேயர்

(நாவற்குழி)

''இன்று உலகில் தமிழன் ஒருதனித்துமான நிலையில் இருப்பதற்கு காரணமே தமிழீழத்திற்காக ஒரு ஆயுதப் போராட்டம் நடைபெறுவது தான். இவ்வாறான போராட்டம் ஒன்று நடைபெற்றிருக்காவிட்டால் நமது இளைஞர்கள் எல்லாம் இன்று முண்டங்களாக வீதிகளிலும், தார் பீப்பாக்களிலும் இருந்திருக்க வேண்டியேற்பட்டிருக்கும்.'

இவ்வாறு வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் மந்துவில் சிறீகாந்தன் (பைக் பைக்) நினைவாக திறக்கப்பட்ட சனசமூக நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசியபோது குறிப்பிட்டார்.

மந்துவில்பிரதேசப் பொறுப்பாளர் திரு. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. ஆஞ்சநேயர் தொடர்ந்து பேசுகையில்;

இன்று நாம் தனித்துவமான முறையிலே எமது மக்களைப் பாதுகாக்கின்ற வீரம்மிக்க ஒரு படையை கொண்டே போராட்டத்தை முன்னெடுக்கிறோம். இந்த நேரத்தில் தான் தனக்கு ஒருகண் போனாலும் சரி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இரண்டு கண்களும் போக வேண்டும் என்ற நோக்கில் இலங்கை அரசு இந்திய அரசிடம் சரணாகதியடையாது எம்மை அழிக்கத் திட்டமிட்டது. ஆனால் எமது போராட்டம் எந்த ஒரு வல்லாதிக்க சக்தியாலும் அழிக்க முடியாத ஒருபலம் வாய்ந்த போராட்டமாகும். இதுவே உலகில் பலம் பெற்ற ஒருவிடுதலை இயக்கமாகும் என்றார்.

வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. குணம் பேசுகையில் ''எமது முன்னோர்விட்ட பிழைகளினால் தான் இன்று ஆயுதம் ஏந்தும் பொறுப்பு எம்மிடம் விடப்பட்டுள்ளது. ஆகையால் நாமும் அதை முழுமையாக நிறைவேற்றா விட்டால் எதிர்காலசமுதாயம் எம்மீதும் அந்தப்பழியைச் சுமத்திவிடும். எந்த ஒரு வல்லரசினாலும் ஒருநாட்டில் நடைபெறுகின்ற இன எழுச்சிப் போராட்டத்தை அடக்கிவிட முடியாது என்றார். (107)

# ஆஸ்பத்திரிச் சீர்கேடுகளை நீக்க நடவடிக்கை

## பணிப்பாளர் தகவல்

(பருத்தித்துறை)

'நாட்டில் ஏற்பட்டுள்ள டாக்டர்கள் பற்றாக்குறைவால் வைத்தியசாலைகளுக்குத் தேவையான டாக்டர்களை பெற்றுக்கொள்வதற்குப் பெருஞ்சிரமங்கள் ஏற்பட்டுள்ளது கவலைக்குரியதாகும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் நிலவும் பற்றாக்குறை சீர்கேடுகளை நீக்கி வைத்தியசாலை நன்கு இயங்குவதற்கான என்னாலான சகல நடவடிக்கைகளையும் நான் மேற்கொண்டுள்ளேன்.

மேற்கண்டவாறு, யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு. என். கனகசபை பருத்தித்துறை அரசினர்ஆதாரவைத்தியசாலை அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவரும் மாவட்ட வைத்திய அதிகாரியுமான டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளதாவது: 'வைத்தியசாலைகளில் நோயாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை அரசினர்வைத்தியசாலையில் பல்வேறு விதமான பற்றாக்குறைகள் சீர்கேடுகள் நிலவுவதாகப் பலத்த புகார்கள் செய்யப்படுகின்றன. இவ்வைத்தியசாலையின் நிர்வாகம் சிறப்பாக இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட வைத்திய அதிகாரிக்கு பணிக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை இவ் வைத்தியசாலையின் அபிவிருத்திகளில் அதிக கவனம் மெடுத்துச் செயற்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். வைத்தியசாலையின் நிர்வாகம் கோரும் கோரிக்கைகளுக்கு நான் உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன்.

சுகாதார அமைச்சினால் இவ்வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள 'எக்ஸ்றே' இயந்திரத்தைப் பொருத்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய மின் அபிவிருத்தி வேலைகளுக்கான திட்டம் மதிப்பீடுகள் இன்னமும் வந்து சேரவில்லை. இதுவந்து சேர்ந்ததும் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(7-ம் பக்கம் பார்க்க)

## பாடசாலை திறப்பு விழா

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பரந்தன் கிளை ஆரம்பப் பாடசாலையின் திறப்பு விழா கடந்த 23-ம் திகதி சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ்.ஜெயபநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அமெரிக்க மிஷனரியின் ஆசியப் பிராந்திய செயலாளரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தர்மகர்த்தா சபை செயலாளருமான வண. எரிக் ஏ. காஸ் சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்தார். விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சென்னை கிறிஸ்தவ கல்லூரியின் அதிபர் வண. கலாநிதி பிரான்சிஸ் சௌந்தரராஜ் செப ஆராதனை நிகழ்த்தினர். இப் புதிய ஆரம்ப பாடசாலையின் அதிபராக திரு.எஸ்.மகிழ்ராஜ் பொறுப்பேற்றுள்ளார். (72)

## ''கல்வியே பெரும் செல்வம்''

[மட்டுவில்]

''கல்விமனிதனுக்கு மிகவும் பெறுமதிவாய்ந்த செல்வமாகும். இதன்காரணமாகவே எமது முன்னோர் தமது எதிர்கால சந்ததியினர் வழிவழியாக கல்விமான்களாக திகழ வேண்டும் என்பதற்காகவே ஆங்காங்கே பாடசாலைகளை அமைத்தனர்.''

இவ்வாறு மட்டுவில் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஸ்தாபகர்தின விழாவில் உரைநிகழ்த்திய அதிபர் கே. பேரம்பலம் கூறினார்.

மட்டுவில் மகாவித்தியாலய ஸ்தாபகர் அமரர் சின்னத்தம்பி கந்தருக்கு மட்டுவில் மகாவித்தியாலயத்தில் ஸ்தாபகர் தினம் கொண்டாடப்பட்டது.

அதிபர் பேரம்பலம் தலைமை தாங்கி தமதுஉரையில் மேலும் கூறியதாவது: அமரர் சுந்தர் சுமார் ஐம்பது ஆண்டுக்கு முன்னர் இப்பாடசாலையை அமைத்தார். அப்பொழுது இது ஒரு சிறியபாடசாலையாக இருந்தது. அன்று அவர் நல்லெண்ணமும், எதிர்கால சமுதாயத்தின் கல்வி வளர்ச்சியைப் பற்றியும் எவ்வளவு சிறந்ததாக அமைய எண்ணினாரோ அதே போன்று இது செழித்து வளர்ந்து ஆலம் விருட்சமாகி இன்று 32 ஆசிரியர்கள் வரையில் இங்கு கற்பிக்கிறார்கள்.

பதில் அதிபர் எ. எஸ். சண்முகலிங்கமும் பேசினார்.

# தீவுப்பகுதி அபிவிருத்தி பிரச்சனைகள் ஆராயப்பட்டு கருத்தரங்கு அறிக்கை தயாரானது

(வேலணை)

தீவுப்பகுதியின் அபிவிருத்தி பற்றிய ஆய்வுக் கருத்தரங்கு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா தலைமையில் வேலணை வங்களாவடி சரஸ்வதி வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்றது.

வடக்கு – கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். சடாச்சர சண்முகதாஸ், யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா ஆகியோர் சம்பிரதாய முறைப்படி மங்கள விளங்கேற்றி கருத்தரங்கை ஆரம்பித்துவைத்தனர்.

இக்கருத்தரங்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவுப்பகுதிப் பொறுப்பாளர் திரு. ஜேம்ஸ், புவியியல்துறைப் பேராசிரியர்கள் மற்றும் யாழ், மாவட்டத்தைச் சேர்ந்த பல அரசாங்க திணைக்களங்கள், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், அதிகாரசபை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், சுகாதாரம், கல்வித் திணைக்களம், நீர்விநியோகம், மோட்டார் படகுச்சேவை, தனியார் வாகனப் போக்குவரத்துச் சங்கம், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களினது உயரதிகாரிகள், பிரதிநிதிகள், அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா தமது உரையில்—''தீவுப்பகுதி அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கியுள்ளது. எனவேதான் விடுதலைப் புலிகளும் இப்பகுதியின் அபிவிருத்தி முன்னேற்றத்தில் பெரும் ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளனர். ஏற்கனவே தீவுப்பகுதியின் அபிவிருத்திக்கென 25 லட்சம்ரூபா செலவில் பலதிட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன அத்திட்டங்கள் நாளடைவில் செயற்படுத்தப்படவும் இருக்கின்றன'' என்றார்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். சடாச்சர சண்முகதாஸ் தமது உரையில்; ''தீவுப்பகுதியிலுள்ள பொதுமக்களினது சரியான அபிப்பிராயங்கள் கிடைக்காததுதான் தீவுப்பகுதி முன்னேற்றத்திற்குத் தடை ஏற்பட்டுள்ளதற்குக் காரணமாகும். யாழ். மாவட்டத்துக்கான ஒன்றிணைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில் தீவுப்பகுதியின் போக்குவரத்துப் பிரச்னைக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை. தீவுப்பகுதியைப் பொறுத்தவரை இங்கு குடிநீர்ப் பிரச்சனைதான் பெரும் பிரச்சனையாகவுள்ளது. அத்துடன் வைத்திய அதிகாரிகளினது பற்றாக்குறையும் அதிகமாகத் தீவுப்பகுதியில் காணப்படுகிறது. குடிநீர் விநியோகத்தை இலவசமாக வழங்க முடியாதிருக்கிறது. ஆனாலும், பிரதேச சபைகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகத்தில் நிதி ஒதுக்கீடு அதிகமாகச் செய்து குறைந்த விலையில் குடிநீர் வழங்க முயற்சிக்கலாம். சகல பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு அதிகாரிகளும் பொதுமக்களும் நெருக்கமாக இருக்க வேண்டும்'' என்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியற்துறைப் பேராசிரியர் திரு. பொன்னுத்துரை பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில்; ''தீவுப்பகுதி, தீவுப்பகுதி தெற்கு, தீவுப்பகுதி வடக்கு, நெடுந்தீவு எனவும் அழைக்கப்படலாமென்றும். இத்தீவின் தனித்துவம்பேணப் படவேண்டும் என்றும், தீவுப்பகுதி மக்களினது வெளியேற்றம் விரும்பத்தக்கதா என்று சரியாக ஆராயப்பட்டு இதற்கான வசதிகளை ஏற்படுத்துவதோடு, தீவுப்பகுதிக்கு மத்திய ஸ்தானம் அமைக்கப்பட்டு, அங்கு முதலீட்டுத் திட்டங்கள் உட்பட அபிவிருத்தித்திட்டங்கள் அமைக்கப்படவேண்டும்'' என்றும் கூறினார்.

கருத்தரங்கில் தீவுப்பகுதியின் போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, குடிநீர், வீதித் திருத்தங்கள் சம்பந்தமாகப் பல மணிநேரம் ஆராயப்பட்டது. பொதுமக்கள் கேட்ட கேள்விகளுக்குத் திணைக்கள அதிகாரிகள் விளக்கமாகப் பதிலளித்தனர்.

கருத்தரங்கில் குறிப்பாகப் போக்குவரத்து, குடிநீர்ப் பிரச்சனைகள் உட்படத் தீவகத்தின் முக்கிய பிரச்சனைகள் ஆராயப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

இக்கருத்தரங்கு தமிழீழவிடுதலைப் புலிகளின் ஏற்பாட்டிற்கு அமைவாக நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# "மதிய போசனத்திற்கு ஆசிரியர்கள் வீடு செல்வதை தடுப்பதற்கு அதிபருக்கு அதிகாரமில்லை"

- மகாசிவம்

(உடுவில்)

''மதியபோசன இடைவேளையின்போது ஆசிரியர்களை மதிய போசனத்துக்காக தமது வீடுகளுக்கு செல்வதை தடைசெய்ய எந்த அதிபர்களுக்கும் அதிகாரம் இல்லை. அப்படியான சுற்று நிருபம் எதுவும் பாடசாலைகளுக்கு அனுப்பப்படவில்லை. சில அதிபர்கள் மாணவர்களின் மதிய போசனத்தை பரிசீலனை செய்வதற்காக ஆசிரியர்களை வீடு செல்லவிடாது தடுக்கக்கூடும். ஆனால் அது ஆசிரியர்களின் உரிமையை மீறும்செயலாகும். இதுபற்றி யாழ். கல்விப்பணிப்பாளருடன் பேசி உரிய நடவடிக்கை மேற்கொள்வேன்.''

இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு' த. மகாசிவம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்ட வருடாந்தக் கூட்டத்தில் திரு. மகாசிவம் தாய்ச்சங்க செயற்பாடுகள் குறித்து உரையாற்றினார். திரு. சி. தாசீசியஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. மகாசிவம் மேலும் கூறியதாவது;–

''தமிழர்வரலாறு, கல்வி ஆலோசனை சபை, தாய்ச்சங்க பணிமனைஆகியவற்றைநிறைவு செய்ய புதிய நிர்வாகசபைக்கு போதிய உதவிகள் செய்து தரப்படும்.

எமது தாய்ச்சங்கம் கடந்த ஏழு ஆண்டுகளாக செயலற்றுப்போய்விடவில்லை. பட்டதாரிகளாக இருந்தும், பட்டதாரிகளுக்குரிய வேதனத்தைப் பெறாமல் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு உரிய வேதனம் பெற்றுக்கொடுத்தோம். இந்திய இலங்கை பட்டதாரிகளுக்கிடையே நிலவிய சம்பள முரண்பாட்டினை அகற்றி இருவருக்கும் சமசம்பளம் பெற வாய்ப்பளித்தோம்.

''அண்மையில் நடைபெற்ற அதிபர் தரம்1, 2க்கு போதிய தமிழர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாததை சுட்டிக்காட்டி மேலதிக பல அதிபர்ஆசிரியர்களைநேர்முகப் பரீட்சைக்கு தோற்ற செய்துள்ளோம்.

''வடக்கு, கிழக்கில் உள்ள எட்டுக் கல்விப்பணிப்பாளரின் அதிகாரங்களும் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதை எதிர்த்து மீண்டும் அவை எட்டுக் கல்விப்பணிமனைகளுக்கும் திரும்ப கிடைக்க செய்துள்ளோம்.

''வேறு எந்த தொழிற்சங்கத்துக்கும் கிடைக்காத 15 வீத தொகையைக் கொண்டு இடமாற்ற சபையில் இடம் பிடித்தோம்.

1983லிருந்து இதுவரை கொலையுண்ட ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு, சம்பளம், ஒய்வூதியம் ஆகியவற்றை யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. உடனடியாக ஓய்வூதியம், சம்பளம் ஆகியவற்றை வழங்கவேண்டுமென யாழ். கல்விப்பணிப்பாளரை கேட்டுக்கொள்கிறேன். அதிபர்கள் மதிய உணவில் மோசடி செய்ததாக காரணம் காட்டி மதிய உணவை அரசாங்கம் நிறுத்தியதாக பத்திரிகைச் செய்திகள் வெளிவருகின்றன. ஒரு சமயம் தென்பகுதியில் அப்படி நடைபெற்றிருக்கலாம். ஒரு சிலரின் தவறுக்காக முழு அதிபர்கள் ஆசிரியர்களையும் பாதிக்கக்கூடியதாக கண்டிக்கக்கூடாது.

''ஆசிரியர்கள், அதிபர்களை கல்வி அதிகாரிகளும், கல்விப் பணிப்பாளர்களும் பகிரங்கமாக அவதூறு கூறுவதை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. ஆசிரியர்களையும், அதிபர்களையும் பகடைக்காய்களாக பாவிப்பதை நாம் சும்மா பார்த்துக்கொண்டிருக்கமுடியாது.

''யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் சகல அதிகாரங்களும் இங்குள்ள ஆறு கோட்டங்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்பதே எமது

(7-ம் பக்கம் பார்க்க)

# உலக முதல்தரப் போட்டிகளில் பிரேஸில் மாத்திரமே தற்போது முன்னணி வகிக்கிறது

## கிண்ணத்தைப் பெறும் சாத்தியமுண்டு

உலகில் ''உதைபந்தாட்ட மன்னர்கள்'', என சிறப்புப் பெயர் பெற்றவர்கள் பிரேஸில் நாட்டவர்களே. உதைபந்தாட்டம், பிரேஸில் நாட்டில் ஒரு தேசிய விளையாட்டு. பிரேஸிலுக்கு விளையாடத் தகுதி பெறும் வீரர்கள் 'தேசியச் சொத்து' என அந்த நாட்டு அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டவர்கள். மற்றைய நாட்டு உதைபந்தாட்ட வீரர்களைப் போல், பிரேஸில் வீரர்கள் பணத்துக்காக வெளிநாடுகளுக்குச் சென்று விளையாட முடியாது.

நமது விளையாட்டு நிருபர் 'தேவா'

பிரேஸில் விளையாட்டு வீரர்களுக்கு அந்த நாட்டு அரசியல் வாதிகளுக்கு வழங்கப்படுவது போன்று தனிப்பட்ட பாதுகாப்புகள் அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இது போன்ற கௌரவம் உலகில் வேறு எந்த நாட்டு விளையாட்டு வீரர்களுக்கும் வழங்கப்படுவது கிடையாது.

உலகஉதைபந்தாட்டக்கிண்ணத்தை முதலில் மூன்று தடவைகள் கைப்பற்றியவர்கள் பிரேஸில் நாட்டவர்களே. இவர்கள் 1958-ம் ஆண்டு நடைபெற்ற 6-வது உலகப் போட்டியில், சுவீடனை 5-2 கோல்கள் வித்தியாசத்தால் தோற்கடித்து, உலக கிண்ணத்தைப் பெற்றனர்.

1962-ம் ஆண்டு நடைபெற்ற 7-வது உலகப் போட்டியில், சொக்கோஸ்லாவாக்கியாவை 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று, உலகக் கிண்ணத்தை தொடர்ச்சியாகக் கைப்பற்றினர்.

3-வது தடவையாக 1970-ம் ஆண்டு நடைபெற்ற 9-வது உலகப் போட்டியில் இத்தாலியை 4-1 கோல்கள் வித்தியாசத்தால் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்தை தமக்கு சொந்தமாக்கிக் கொண்டனர். இப்பெருமைகள், உலகப்புகழ் பெற்ற வீரர் 'பீலே'யைத் தான் சாரும்.

இதுவரை காலமும் நடைபெற்ற 13 உலகப் போட்டிகளிலும் பிரேஸில் மட்டுமே தொடர்ச்சியாக விளையாடுவதற்கு தகுதி பெற்று வந்துள்ளது. தற்போது இத்தாலியில் நடைபெறவுள்ள 14-வது உலகப் போட்டிக்கும் பிரேஸில் தகுதி பெற்றுள்ளது.

தற்போதைய பிரேஸில் கோஷ்டியைப் பற்றி அக்கோஷ்டியின் மனேஜர் திரு. சேபஸ்ரியே லசரோணி தகவல் தெரிவிக்கையில், ''நாம் இம்முறை மிகவும் பலம்வாய்ந்த நிலையில் இருக்கின்றோம். சென்ற, மெக்ஸிக்கோ உலகப் போட்டியில் ஸ்பெயின், அல்ஜீரியா, அயர்லன்ட் போன்ற பலம் வாய்ந்த கோஷ்டிகளை வெற்றி பெற்ற போதிலும் எதிர்பாராத விதமாக, இறுதி ஆட்டத்தில் விளையாட முடியாமல் தவறிவிட்டோம்.

ஆனால் இம்முறை நாம் புதிய முறைகளில் மைதானத்தில் விளையாடப்போகின்றோம். எமது புதிய, நவீன விளையாட்டு முறைகளை எதிர் அணியினரால் முறியடிக்க முடியாது. எம்மிடம் உலகப் புகழ் வாய்ந்த இளம் வீரர்களான பிபிட்டோ யூனியர், கரேக்கா, ரேமாறியோ, யோசிமா போன்ற வீரர்களும், சோக்கிறட்டீஸ். சீக்கோ, எய்டர் போன்ற அனுபவசாலிகளும் இருக்கிறார்கள். எந்தப்போட்டிக்கு எந்த வீரர்களை நாம் பயன்படுத்தப் போகிறோம் என்பது யாருக்கும் தெரியாது.

இம்முறை நாம் உலக கிண்ணத்தை கைப்பற்றுவது நிச்சயம். அத்துடன் உலக கிண்ணத்தை 4-வது தடவையாக கைப்பற்றிய நாடு பிரேஸில் என்ற பெருமையையும் பெறுவோம்'' எனக் கூறியுள்ளார்.

உலக உதைபந்தாட்ட அவதானிகளின் கணிப்புப்படி; ''பிரேஸில் இம்முறை உலகப்போட்டியில் பிரமிக்கத்தக்க பல சாதனைகளை ஏற்படுத்தக்கூடும். இக்கோஷ்டியில் பல இளம்வீரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொரு போட்டியிலும், ஒவ்வொரு புதிய முறையில் விளையாடுவதால், எதிர் அணியினர் இவர்களின் சாகசங்கள் நிறைந்த விளையாட்டுகளை புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றார்கள். இதனால் உலக கிண்ணத்தை இம்முறை பிரேஸிலே பெறக்கூடும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

### சாதனைகள்

பிரேஸில் கோஷ்டி இதுவரை 62 முதல் தரப்போட்டிகளில் மோதியுள்ளது. இதில் 41 போட்டிகளில் வெற்றி பெற்று; 11 போட்டிகளில் தோல்வியடைந்து; 10 போட்டிகளை சமமாக்கி 92 புள்ளிகளைப் பெற்று உலகில் முன்னணி வகிக்கின்றது.

பிரேஸில் உதைபந்தாட்டச் சங்கம் 1914ம் ஆண்டு உதயமானது. இவர்கள் உலக கிண்ணத்தை மூன்று தடவைகள் கைப்பற்றினர்கள். 1950-ம் ஆண்டு 2-வது இடத்தையும், 1938, 1954, 1966, 1982, 1986-ம் ஆண்டுகளில் 3-வது இடத்தையும் பெற்றுள்ளனர்.

அடுத்து, மே.ஜேர்மனி, இங்கிலாந்துக் கோஷ்டிகளின் தற்போதைய நிலைபற்றிப் பார்ப்போம்.




### மதிய

(6ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாடாகும்.

''அண்மையில் யாழ். கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் பயிலுநர் தெரிவுகூட அந்தந்தக் கோட்டக்கல்வி அலுவலகங்கள் மூலம் செய்திருந்தால் அத்தெரிவு பற்றி இன்று கிடைத்துவரும் முறையீடுகளில் எழுபத்தைந்து சதவீதத்தைக் குறைத்திருக்கலாம்'' என்றார். (109)

### ஆஸ்பத்திரி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய இராட்சிய சிறுவர் நிலையத்தினால் அன்பளிப்பாக வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட மின்இயந்திரத்தைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக் கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மருத்துவப் பிரிவின் முக்கிய உறுப்பினரும் சமுகமளித்திருந்தார். அவர் வைத்தியசாலையில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகள், நிர்வாகச் சீர்கேடுகள், ஊழியர்களின் ஒழுங்கற்ற நடவடிக்கைகள் பற்றிச் சுட்டிக்காட்டி வன்மையாகக் கண்டித்ததுடன் வைத்தியசாலையில் நிலவும் நிர்வாகச் சீர்கேடுகள், சுகாதாரச் சீர்கேடுகளைப் போக்க யாழ்.சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (52)

ஹரன்
சினிமா
தினசரி 4-00, 6-45. 9-30
சனி, ஞாயிறு
நாட்களில்
10-30, 2-30 6-30,
9-30
ஜெய்சங்கர்-K R.விஜயா
நாகேஸ் சுருளி
நடித்த
திருடி

### புதிய ஆணையாளருக்கு வாழ்த்து

(பண்டத்தரிப்பு)

அகில இலங்கை சாரணர் சங்க பிரதம ஆணையாளராச கடமையாற்றி அண்மையில் காலமான திரு. றெக்ஸ் ஜெயசிங்காவின் இடத்திற்கு புதிய ஆணையாளராக திரு. லயன் சில்வா நியமிக்கப்பட்டுள்ளமையை பாராட்டி காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கத்தின் சார்பில் அதன் காரியகர்த்தர் குழுத் தலைவர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இவ்வருடத்தில் தனது பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ள காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கத்தின் வளர்ச்சியில் ஆரம்பம் முதல் மிகுந்த அக்கறை செலுத்தியவரான திரு. லயனல் சில்வாபுதிய ஆணையாளராக நியமிக்கப்பட்டிருப்பது எமது சங்கத்தின் செயற்பாடுகளுக்கு உத்வேகத்தைஅளிக்குமென்று தாம் நம்புவதாக டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி இந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (72)

### வார்ட்டில் கிடந்த சடலம்

[வடமராட்சி]

மந்திகை வைத்திய சாலை வாட்டில் இறந்த ஒருவரின் சடலம் ஐந்து மணித்தியாலமாக அப்புறப்படுத்தாத நிலையில் காணப்பட்டது.

வைத்தியசாலை வார்ட்டில் நோயாளர்கள் இறந்தால் சடலம் இருமணித்தியாலங்களுக்குள் அப்புறப்படுத்த வேண்டும் என்பது சாதாரண நடைமுறை.

அப்படியிருந்த போதும் நேற்று திங்கள் அதிகாலை மூன்று மணியளவில் இறந்த ஒருவரின் சடலம் காலை 8-00 மணிவரைவார்ட்டில்கட்டிலில் கிடந்து ஏனையநோயாளர்களை அதிருப்தி கொள்ளச் செய்துள்ளது. [51]

## இப்படியும் நடக்கிறது

கூட்டுறவுச் சங்கங்களின் உண்மை நோக்கம் என்ன?

''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்று, முன்னர் எழுப்பப்பட்ட 'கோஷம்' இன்றும் ஞாபகம் இருந்தாலும், 'கூட்டுறவு அமைப்பை' அன்று கட்டிவளர்த்த பெரியவர்களை யெல்லாம் நினைத்துப்பார்க்கும்போது... இன்றைய நிலை மலையும் மடுவுமாக இருக்கிறது!

கூட்டுறவின் அடிப்படைநோக்கமே தூக்கிவீசப்பட்ட நிலையில் இன்று சில கூட்டுறவுச் சங்கங்கள் துணிச்சலாக செயல்படுவதைக் காணும்போது; சங்கங்களுக்கு மக்களா? அல்லது மக்களுக்குச் சங்கங்களா என்று எண்ணத் தோன்றுகிறது.

''மா, பாண் விலை ஏறுகிறது; சீனி, அரிசி விலை இறங்கியது'' என்று செய்தி வந்ததுதான் வந்தது... சில இடங்களில் அதுவும் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை விற்பனை நிலையங்களில் மா பகிரங்கமாகப் பதுக்கப்பட்டு மக்கள் சேவை புறக்கணிக்கப்பட்டுள்ளது!

''மா இருந்தும் விற்கிறார்கள் இல்லை'' என்றுகிடைத்த புகாரின் மீது சில கிளை விற்பனை நிலையங்களில் கடந்த சனிக்கிழமை ஊடுருவிப் பார்த்தோம்.

''மா இல்லை'' என்ற பதில் வந்ததுடன் கிளை விற்பனை நிலையங்களுக்கு தாய்ச் சங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ''மறு அறிவித்தல் வரை மா விற்பனை செய்ய வேண்டாம்'' என்ற தகவலும் காதில் விழுந்தது!

சற்று ஆழமாக ஊடுருவிப் பார்த்தோம்.

கையிருப்பில் மா வைத்திருந்த சில கிளை விற்பனை நிலையங்கள் 'அம்போ' என்று மூடப்பட்டிருந்தன! கடந்த சனிக்கிழமை வேறு பல கிளை விற்பனை நிலையங்களில் மா விற்கப்படவே இல்லை! இவற்றின் எதிரொலி அப்பகுதியில் இரண்டு தினங்கள் பாண் இல்லை!

சீனி, அரிசி விலை குறைந்தது என்று, மா விலை ஏற்றத்துக்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருந்ததே... குறைத்தார்களா? மூச்சு...!

'மக்கள் சேவையே மகேசன் சேவை' இது அந்தக் காலம். 'கூட்டுறவு நாட்டுயர்வு' இதுவும் அந்தக்காலம் தான்! ஒட்டுமொத்தமாக சுயநலம் கலந்த 'கூட்டுறவுஸம்' தான் இன்று நடக்கிறது. சில சங்கங்கள் விடும் பாரிய தவறினால் முழுக்க முழுக்க மக்கள் சேவையாற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பெயருக்கும் இழுக்கு ஏற்பட்டுவிட்டது!

''கூட்டுறவே ஒழிக!'' என்று மக்கள் குரல் எழுப்பாமல் இருந்தால் சரி!

'ஊடுருவி'

## மன்னார் செய்திகள்

### புள்ளி விபரம் சேகரிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் திட்டமிடல் அலுவலகத்தில் ஒவ்வொரு கிராமசேவை அலுவலர் பிரிவிலும் 18 வயதுக்கும், 40 வயதுக்கும் இடைப்பட்ட திருமணம் ஆகாத பெண்களை மட்டும் கணக்கெடுக்கும்வேலைகள் தற்சமயம் ஒவ்வொரு கிராமசேவை அலுவலர் பிரிவிலும் நடைபெறுகின்றன. இவ்வகைப்பட்டவர்களின் நலன் கருதி, சுயதொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்படலாம் என அறியப்படுகின்றது.

### விளையாட்டு விழா

விளையாட்டுத்துறை அமைச்சின் ஆதரவுடன் அண்மையில் சிலாவத்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இப்போட்டிக்கு முசலி உதவி அரச அதிபர் திரு. ஆர். கார்மேக சுந்தரம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. மு. ஜீவரத்தினமும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இப்போட்டியில் முள்ளிக்குளம், கொக்குப்புடையான், சிலாவத்துறை, அரிப்பு, முசலி ஆகிய கழகங்கள் பங்கெடுத்தன. இவ்விளையாட்டுப் போட்டி ஒழுங்குகளை முசலி விளையாட்டு உத்தியோகத்தர் திரு. டி. எமில்கோசை மேற்கொண்டார்.

### வெங்காயம் 1 கிலோ 70 ரூபா

மன்னாரில் சின்னவெங்காயத்தின் விலை ஒரு கிலோ 70 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதன் எதிரொலியாக பெரிய வெங்காயம் மன்னாரில் கூடுதலாக விற்பனை செய்யப்படுகின்றது.

### புதிய பொறுப்பதிகாரி

தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக திரு. ஏ. தேவசகாயம்பிள்ளை பொறுப்பேற்றுள்ளார். முன்னர் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு எஸ். குகதாசன் மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார், இதேவேளை மன்னார் பொலிஸ் நிலையத்தில் தலைமையக இன்ஸ்பெக்டராகக் கடமை புரிந்த திரு. அ. அரசரத்தினம் பிரதம இன்ஸ்பெக்டராக உயர்வுபெற்று, கிளிநொச்சி மாவட்டத்துக்கு உதவிப் பொலிஸ் அதிபராகவும், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக திரு. எஸ். மேனனும் நியமனம் பெற்றுள்ளனர்.

### நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர்

கல்விச் சேவை ஆணைக்குழுவினால் அண்மையில் நடாத்தப்பட்ட அதிபர் தரம் 1, அதிபர் தரம் 2, அதிபர் தரம் 3 பரீட்சைகளில் அதிபர் தரம் 2, 3 முடிவுகள் வெளியாகின. மன்னாரில் மிகவும் குறைந்த தொகை ஆசிரியர்களே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இருந்தும் மேலும் மனனாரில் அதிபர் 1க்கு மூன்று பதிலதிபர்கள் கொழும்பில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வீதிசீர்கேடு

(மானிப்பாய்)

நவாலி அரசடியிலிருந்து இடிகுண்டடியூடாக மானிப்பாய் செல்லும் வீதி பல ஆண்டு காலமாகத் திருத்தப்படாமல் உள்ளது.

## நயினாதீவு உற்சவத்தின் போது பயன்படுத்தப்படும் படகுகளின்

# கடற் போக்குவரத்து தகமை பரிசோதிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு உற்சவத்தின் போது யாத்திரிகர்களைக் கொண்டுசெல்லும் சேவையில் ஈடுபடுத்தப்படும் மோட்டார் படகுகளின் கடற் போக்குவரத்து தகமையை பரிசோதிக்க கப்பல் துறைமுக அமைச்சின் கீழ் உள்ள அதிகாரியான பொறியிலாளரும் கப்பல் தகமைக் கணிப்பாளருமான திரு. எச். என். அல்மெய்டா ஜூன் முதல் வாரத்தில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

நயினாதீவில் உள்ள படகுகளில் பன்னிரண்டு படகுகளே சேவையில் ஈடுபடுத்தக் கூடியதாக உள்ளது. இவர்களும் அனலைதீவு, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலுள்ள படகுச் சொந்தக்காரர்களும் ஏனைய இடங்களிலுள்ள படகுச் சொந்தக்காரர்களும் இத் திருவிழாக் காலங்களில் இங்கு சேவையாற்ற விரும்பினால் ஜூன் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் சுங்கப்பகுதியிடமிருந்து உத்தரவுப்பத்திரத்தைப் பெற்ற பின் வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பதிவு செய்து உரிய அனுமதிப்பத்திரத்தை பெறவேண்டும்.

பொருட்களை ஏற்றி இறக்கும் படகுகளில் யாத்திரிகர்களைக் கொண்டு செல்வது தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் படகுகளில் யாத்திரிகர்கள் பயணம் செய்கையில் விபத்துக்கள் முதலிய இடர்கள் ஏற்படின் நயினாதீவு கடற்றொழிலாளர்களின் உதவியுடன் கடல் பாதுகாபபுச் சேவைக்கு வள்ளம் ஒன்றை ஒழுங்கு செய்யவுள்ளதாகத் தெரியவருகிறது.

யாத்திரிகர்களைக் கொண்டு செல்லும் சேவையில் ஈடுபடுத்தப்படும் மோட்டார் படகுகளில் முதலுதவி, பாதுகாப்பு சாதனங்கள் கட்டாயம் வைத்திருக்கப்படவேண்டும். வெளிச்ச வசதிகளும் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (153)

## யாழ். இந்து மகளிர் இல்ல விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துமகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-15 மணியளவில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்த வைபவத்தில் யாழ்ப்பாணம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி ய. தியாகராஜா பரிசில்களை வழங்குவார்,

## றேவின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துறை பிரிவாக இருந்ததால் முன்னைய மத்திய அரசை பிழையான வழியில் இட்டுச் சென்றது. தற்போதும் அது இப்போதைய மத்திய அரசுக்கு பிழையான வழியையே போதிக்கிறது.

'றே'வின் தவறான வழி நடத்தலையே இலங்கையில் இந்திய அமைதிப்படை கடைப்பிடித்துள்ளது என்றும் அவர் கூறினார். (சி)

## பாடசாலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 25ம் திகதி யாழ். பற்றீசியன் இன்சிரியூட், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, மட்டக்களப்பு பெரியகல்லாறு மத்திய மகாவித்தியாலயம், சுன்னாகம் பொது நூல் நிலையம் ஆகியவற்றிற்கு தலா 200 நூல்களும், கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்திற்கு 150 நூல்களும், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்திற்கு நூறு நூல்களும் வழங்கப்பட்டன.

இம்முறை கிடைத்த நூல்களில் 1500 நூல்கள் திருமலை, மட்டக்களப்பு மாவட்ட கல்லூரிகளுக்கு விநியோகிப்பதற்காக திருமலைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அங்கு ஜூன் 11ல் நடைபெறவுள்ள நூல்கள் விநியோகத்திற்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் தமது செயற்குழு உறுப்பினர்களுடன் நேரடியாகச் செல்லவுள்ளார்.

இவ்வாண்டு அக்டோபர் மாதத்தில் மீண்டும் ஒரு தொகுதி நூல்களை றன்போர்லி நூல் நிலையத்தினர் அனுப்பவுள்ளனர். இவற்றைப் பெற விரும்புவோரை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் வேண்டுகின்றார்.

## அனலைதீவு கடற்பகுதியில் கடத்தல் முயற்சியை கடற்படையினர் முறியடித்தனர்!

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கண்ணாடிஇழைப் படகில் சட்டவிரோதமாக கடத்திச் செல்லப்பட்ட 15 பொதிகள் அடங்கிய கராம்பு, சாதிக்காய்பூ, ஆறு ரீ. வி, டெக்குகள். நூறு வீடியோ நாடாக்கள். பதினாலு பவுண் நிறையுள்ள தங்கப் பாளங்கள் ஆகியவை கடந்த 24-ந் திகதி நள்ளிரவு அனலைதீவு கடற்பகுதியில் வடபகுதி கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. இந்தப் படகில் இருந்த நால்வரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 25-ம் திகதி காலை காங்கேசன்துறை சுங்கப் பகுதி விசேட தடுப்பு பிரிவினரிடம் படகையும் பொருட்களையும் சம்பந்தப்பட்ட நாலு பேரையும் கடற்படையினர் ஒப்படைத்தனர். இவர்களில் மூவர் யாழ். குடாநாட்டு வாசிகள் மற்றவர் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர். சுங்கப் பகுதியினர் விசாரணையின் பின்பு படகும், பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்ட . படகில் வந்த நால்வரும் 29 ஆயிரம் ரூபா பிணையில் விடப்பட்டனர்.

இதே வேளையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இயந்திரம் பூட்டிய மரப்படகில் கடத்தி ரெப்பட்ட 29 பொதிகள் அடங்கியசேலைகள், சாரங்கள், ஐவுளித் துணிகள் ஆகியன கடந்த 24-ம் திகதி இரவு காரைநகர் கோவளம் கடற்பகுதியில் இலங்கை கடற்படையினரால் முடியடிக்கப்பட்டது. கடந்த 25-ம் திகதி காலை கடற்படையினர் பொருட்களையும் படகையும் அதில் வந்த யாழ். வாசிகள் நால்வரையும் காங்கேசன்துறை சுங்கப் பகுதி விசேட தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்தனர்.

சுங்க விசாரணைகளைத் தொடர்ந்து பொருட்களும் மரப்படகும் பறிமுதல் செய்யப்பட்டு, நால்வரும் 25 ஆயிரம் ரூபா பிணையில் விடப்பட்டனர். (153)

## மாகாண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஜெயா ஆகியோர் பங்குபற்றினர். பொலிஸ் தரப்பில் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் கர் திரு. ஆனந்தராசா, திரு. ஜெயராசா ஆகியோர் பங்குபற்றினர்.

படை அதிகாரிகள் தரப்பில் வடக்குக் கிழக்கில் உள்ள இராணுவத்தினரின் நடமாட்டம் ஏன் கட்டுப்படுத்தப்பட்டது? என வினவப்பட்டபோது, விடுதலைப் புலிகள் இதற்குப் பதில் அளித்ததாவது:

இலங்கை இராணுவத்தின் இராணுவ முஸ்தீபு பற்றியும், குண்டுவீச்சு விமானங்கள் தமிழீழத்தின் மேலாகப் பறந்து செல்வதையும், கிழக்கிலங்கையில் இராணுவ முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டும், பலப்படுத்தப்பட்டு வருவதாயும், அதனால்தான் விடுதலைப் புலிகள், இராணுவ, பொலிஸ் படைகளுக்குக் கட்டுப்பாடுகள் விதித்திருப்பதாகவும் குறிப்பிட்டனர். (152)

## பதவி ஏற்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரியாக நியமிக்கப்பட்ட திரு. எஸ் ஐ. நித்தியராஜ் நேற்றுக் காலை யாழ். செயலகத்தில் பதவி ஏற்றார்.

இலங்கை நிர்வாக சேவைத் தரத்தைச் சேர்ந்த இவர், இதற்கு முன்பு யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளராகக் கடமையாற்றியவர்.

கடந்த சில வருடங்களாக யாழ். செயலகத்தில் பொது சனத் தொடர்பு அதிகாரி பதவி வெற்றிடமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (153)

## வெங்காயம் பருப்பு இறக்குமதி

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம், பெரிய வெங்காயத்தையும், பருப்பையும் அவசரமாக இறக்குமதி செய்வதற்குக் கொள்வனவுக் கட்டளைகளை அனுப்பிவைத்துள்ளது.

போதியளவு பெரிய வெங்காயமும், பருப்பும் விரைவில் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் விளைவாகத் தற்போது இப்பொருள்களுக்கு இருக்கும் தட்டுப்பாடு முற்றாக நீங்கிவிடும் என்று தெரிவிக்கப்பட்டது.

2 கப்பல்களில் பெரிய வெங்காயமும், பருப்பும் அடுத்த சில நாட்களில் இங்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 2 லட்சம் ரூபா கொள்ளை

[கொழும்பு]

கொழும்பில் இருந்து காத்தான்குடிக்குச் சென்றுகொண்டிருந்த விசேட பஸ் ஒன்று, வெலிக்கந்த என்னுமிடத்தில் மறிக்கப்பட்டு 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் ஆயுதம் தாங்கிய இளைஞர்களினால் அண்மையில் கொள்ளை அடிக்கப்பட்டன.

தங்கச் சங்கிலிகள், தோடுகள், கைக்கடிகாரங்கள் உட்பட 75,000 ரூபா பணமும் அபகரிக்கப்பட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [க]

## அச்சுவேலி சோக மயம்

[அச்சுவேலி]

வீர வேங்கை நிசாந்தனுக்கு அஞ்சலி தெரிவித்து, அச்சுவேலி நேற்று முன்தினம் சோக மயமாகக் காட்சியளித்தது.

சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. வீதிகள் தோறும் கறுப்புக கொடிகளும் தோரணங்களும் கட்டப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சுகயீனம் காரணமாகக் கடந்த சனிக்கிழமை மரணமடைந்தவீரவேங்கை வில்வரெட்ணம் ஜெயரத்தினம் (நிசாந்தன்), பூதவுடல் அவரது வசிப்பிடமான அச்சுவேலி கதிரிப்பாய்க்கு சனிக்கிழமை மாலை கொண்டுவரப்பட்டது. ஞாயிறு நண்பகல் அச்சுவேலி பஸ்நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்ட நிசாந்தனின் பூதவுடல், அங்கு பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அஞ்சலியை அடுத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட பூதவுடல், கதிரிப்பாய் குடும்ப மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. [74]

## குடிசன

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைகளை குறிப்பிடும் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இறுதி தொகை மதிப்பீட்டுக்கான படிவங்கள் தயாரிக்கப்படவிருக்கின்றது.

இலங்கையின் முதலாவது குடிசன, வீட்டுவசதித் தொகை மதிப்பு 1871-ம் ஆண்டு நடாத்தப்பட்டது. அன்றிலிருந்து பெரும்பாலும் 10 வருடங்களுக்கு ஒருமுறைதொகை மதிப்பு ந த்தப்பட்டு வருகிறது. தொகை மதிப்பின் முக்கிய நோக்கம் நாட்டிலுள்ள குடிசனத்தின் அளவையும், பரம்பலையும், சமூக பொருளாதாரச் சிறப்பியல்புகளையும், நாட்டிலுள்ள வீடுகளின் இருப்புக்களையும் அவற்றின் சிறப்பியல்புகளையும் அளவிடுதல் ஆகும். (153)

## வடக்கு - கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தையின்போது, நீதியமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்துக்கு விடுதலைப் புலிகளினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் வருமாறு:

சமீப காலத்தில் பேச்சுவார்த்தையில் ஒரு மந்தநிலை ஏற்டுள்ளது. அரசியல் வெறுமன் நிலை உள்ளது. ஒரு வருட காலம் தொடர்ந்து இது பற்றிப் பேசினோம். இனிமேலும் இது பற்றிப் பேசிக்கொண்டு இருக்கமுடியாது.

உடனடியாக அரசாங்கம் அக்கறை செலுத்தி, மாகாண சபைக் கலைப்பு, அரசியலமைப்பின் 6வது ஷரத்து நீக்கம் பற்றிய எமது கோரிக்கைகளை நிறைவேற்றி, மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அவர்களிடம் உள்ள நம்பிக்கையின்மையையும், பயத்தையும் போக்குவது அரசாங்கத்தின் கடமையாகும்.

இதுபற்றி ஜனாதிபதியுடன் பேசி மாகாணசபையைக் கலைத்து தேர்தல் வெகு விரைவில் நடத்தப்படும், 6-வது திருத்தச் சட்டத்தை நீக்கும் மசோதாவை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்'' இவ்வாறு நீதி அமைச்சர் ஹமீட் விடுதலைப் புலிகளுக்கு உறுதிமொழி வழங்கினார்.

## மீண்டும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

1985-ம் ஆண்டு தமிழ்நாடு சட்ட மன்ற மேல் அவை கலைக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது, (கி)

## சீதனக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெறியப் போராடுவது.

★ பெண்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்படும் ஆதிக்க முறையையும் வன்முறையையும், சுரண்டல் முறையையும் எதிர்த்துப் போராடுவது.

★ சமூக அரசியல் பொருளாதார வாழ்வில் பாலியல் ரீதியாக பெண்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாரபட்சங்களையும் அநீதிகளையும் சமத்துவ மின்மையையும்எதிர்த்துப் போராடுவது.

★ கருத்துலக மூட நம்பிக்கையிலிருந்து உருப்பெற்ற பெண்ணினம் பற்றிய தவறான மதிப்பீடுகளையும் சிந்தனை வடிவங்களையும் எதிர்த்துப் போராடுவது.

★ தொழில்துறையிலும் கல்வித்துறைலும் பெண்களின் சமத்துவம் நிலைநாட்டப் போராடுவது.

★ பெண்கள் மத்தியில் சமூக அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்களிடையே தலைமைத்துவத்தை உருவாக்கப்பாடுபடுதல்.

★ இன ஒடுக்கு முறையாலும் யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்ட பெண்கள், விதவை அனாதைகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் வகையில் பொருளாதாரத் திட்டங்கள் அமைத்துச் செயற்படுதல்.

★ கட்சியின் அடிப்படைக் கொள்கையையும், மகளிர் முன்னணியின் குறிக்கோள்களையும் தமிழ் முஸ்லிம் பெண்கள் மத்தியில் எடுத்து விளக்கி மகளிர் முன்னணியின் தலைமையிலும், வழிநடத்தலிலும் தமிழீழ மாதர் சமுதாயத்தை திரட்டுவது.

★ உலகடங்கிய முற்போக்கான மகளிர் இயக்கங்களில் தொடர்பு ஏற்படுத்தி நல்லுறவை வளர்த்து, சர்வதேச ரீதியாக பெண்ணினத்தின் விடுதலைக்காகவும் விமோசனத்துக்காகவும் உழைப்பது.

இத்தீர்மானங்கள் யாவும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதோடு, கீழ்க்கண்ட அமைப்புகளின் கட்டமைப்பாக விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணி இங்கும் உறுப்பினர், சிற்றூரவைகள், வட்ட அவைகள், மாவட்ட அவைகள், பொதுக்குழு, விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைமைச் செயற்குழு என்பனவாகும்.

விடுதலைப்புலிகளின் செயற்குழுவில் மகளிர் முன்னணியின் பிரதிநித்துவம் அதிகரிக்கப்படவேண்டும். மகளிர் முன்னணிக்கு ஒரு சின்னம் தயாரிக்கப்பட வேண்டுமென்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

தமிழீழத்தின் எல்லா மாவட்டங்களிலிருந்து மகளிர் முன்னணிப் பிரதிநிதிகள் இதில் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (152)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.